
# அண்ணலின் நிர்மாணத் திட்டம்

## மகாத்மா காந்தி



காந்திய இலக்கியச் சங்கம்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை- 20

# வைஷ்ணவன் யார்

சொல்லுவோம் வைஷ்ணவன் யாரெனக்கேளீர்
சோர்ந்தவர் பீடையை அறிவானே
எல்லோர்தம் துக்கத்தை எரிப்பவனாயினும்
எள்ளளவும் கர்வம் அடையானே.

மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே
சொல் மனம் உடலதில் சுத்தமதானவன்
சோதியுற்றாள் பெற்ற தாய்மாரே

பாவப் பேராசையற்றுப் பார்வை சமத்வமுற்று
பரஸ்திரீயைத் தாயெனப் பணிவானே
நாவினால் பொய்மொழி நவிலவும் மாட்டான்
நாளும் பிறர்செல்வம் தீண்டானே

மாயையும் மோகமும் மாயும் அவன்பால்
மனதில் வைராக்கியம் உறுவானே
ஓயாமல் ராமனை உள்ளம் நினைந்திட
உண்டு புண்ணியப்புனல் உடலதிலே

காமமும் லோபமும் கபடமும் கோபமும்
கனவிலும் இல்லாத கனவானே
பாமரர் பார்த்திடப் பற்பல தலைமுறை
பாவன மடைந்திடச் செய்வானே

(சொல்லுவோம்)

- நரசிங்மேத்தா

# நிர்மாணத் திட்டம்

( மகாத்மா காந்தியின் 18 அம்சத்திட்டம்)



## மகாத்மா காந்தி

*தமிழாக்கம்*

**மு. அருணாசலம்**

**காந்திய இலக்கியச் சங்கம்**

தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-625 020.

காந்திய இலக்கிய சங்க வெளியீட்டு எண் : 26

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நிர்மாணத் திட்டம் |
| ஆசிரியர் | : | மகாத்மா காந்தி |
| தமிழாக்கம் | : | மு. அருணாசலம் |
| வெளியிட்டோர் | : | காந்திய இலக்கியச் சங்கம்<br>மதுரை-625 020. |
| அச்சிட்டோர் | : | மாடர்ன் ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>சிவகாசி-626 123. |
| பதிப்பு | : | முதல் 8 பதிப்புகள் 16,000 |
| | : | 9ம் பதிப்பு ஜனவரி-2020 |
| பிரதிகள் | : | 2000 |
| விலை | : | ரூ. 25.00 |





| | | |
|---|---|---|
| *Title* | : | *Nirmana Thittam*<br>*(Constructive Programme)* |
| *Author* | : | *Mahatma Gandhi* |
| *Translator* | : | *M. Arunachalam* |
| *Publisher* | : | *Gandhian Literature Society*<br>*Madurai - 625 020.* |
| *Printer* | : | *Modern Offset Printers,*<br>*Sivakasi - 626 123.* |
| *Edition* | : | *First 8 Editions - 16,000* |
| | : | *9th Edition - January - 2020* |
| *Copies* | : | *2,000* |
| *Price* | : | *Rs. 25.00* |

# பொருளடக்கம்

## பதிப்புரை

மகாத்மாகாந்தி அடிகளின் "நிர்மாணத் திட்டம்" நூலை மொழிபெயர்த்து சென்னை அரசாங்கத்தாரால் 1949 மார்ச்சில் வெளியிடப்பட்டது. அதில் இந்நூலின் மகத்துவத்தை பதிப்புரையே விளக்கும்.

"நிர்மான வேதம். எனச் சொல்லத்தகும் இப்புத்தகம் கிராம அபிவிருத்தியில் ஆர்வமுள்ள அனைவருக்கும். முக்கியமாக காந்தியடிகள் காண விரும்பிய சர்வோதய சமுதாயம் உருவாகிட வேலை செய்யும் நிர்மாண ஊழியர்களுக்கு. பெரிதும் பயனுள்ளதாயிருக்குமென்று நம்புகிறோம்."

சர்வோதய பிரசுராலயம் இந்நூலை முதல் பதிப்பாக வெளிவிட்டு விற்பனை செய்து விட்டது. அதன்பிறகு காந்திய இலக்கியச் சங்கம் இந்நூலை வெளியிடுவதில் பெருமையடைகிறது. இந்நூலுக்கு மக்களிடம் நல்ல ஆதரவு கிடைக்குமென நம்புகிறோம்.

**மதுரை - 20** காந்திய இலக்கியச் சங்கம்.
**1-11-97**

# மொழிபெயர்ப்பின் முகவுரை

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டமானது முதன் முதலில் கட்டுரை யுருவத்தில் ஹரிஜன் பத்திரிகையில் 1940 ஆம் வருடம் ஆகஸ்ட்டு மாதம் 18 ஆம் தேதி வெளியாயிற்று. பின்னர் இது தனிப் புத்தகமாக 1941 ஆம் ஆண்டு வெளிவந்தது. அக்காலம் இரண்டாவது உலக யுத்தம் நடந்து வந்த காலம். தனிப்பட்டோர் சத்தியாகிரகத்தை நிறுத்தி, புதிய பாரதத்தைச் சிருஷ்டிக்கும் வேலையாகிய நிர்மாண வேலையில் எல்லோர் மனத்தையும் செலுத்த எண்ணிய காந்தியடிகள் அப்போது இந்த நிர்மாணத் திட்டத்தை வகுத்துக்கொடுத்தார். அவரே கூறுகிறபடி, இதில் புதிதாக ஒன்றும் இல்லை. இந்திய சுயராஜ்ய போராட்டத்தில் சத்தியம் அன்பு என்ற அடிப்படையில், அவர் தம் வாழ்க்கையில் நெடுங்காலமாய்க் கடைப்பிடித்துச் செய்துவந்த சில திட்டங்களைச் சகல ஊழியரும் செய்ய வேண்டுமென்ற கருத்தோடு அவற்றை முறைப்படுத்தி வெளியிட்டதே இந்தப் புத்தகம்.

இந்த நிர்மாணத்திட்டத்தில் அப்போது பதின்மூன்று அம்சங்கள் இருந்தன. ஆனால், புதிய பாரத சமுதாயத்தை நிருமாணிப்பதற்கான துறைகள் பதின்மூன்றுதான் என்று வரையறுப்பதற்கில்லை; இவை எத்தனையோ பல. முதற் பதிப்பாய்த் திருத்தி வெளியிட்டபோது, காந்தியடிகள் வேறு சில புது அம்சங்களைச் சேர்த்து மொத்தம் பதினெட்டாக்கி வெளியிட்டார். இப்பதினெட்டு அம்சங்களே, ' காந்தியடிகளின் பதினெட்டு அம்சங்கள்' எனப் பின்னர் பிரசித்தமாக வழங்கலாயின. இவையடங்கிய இரண்டாம் பதிப்பு 1945 ஆம் வருஷக்கடைசியில் வெளியாயிற்று. அப்பதிப்பின் மொழிபெயர்ப்பே இத் தமிழ் புத்தகத்தின் முதற் பகுதி.

காந்தியடிகளுடைய பதின்மூன்று அம்ச நிர்மாணத் திட்டம் முதற் பதிப்பு 1941 இல் வெளியான பின், 'நிர்மான திட்டம் ' 'சில யோசனைகள்' என்ற பெயரோடு பாபு ராஜேந்திரப் பிரசாத் ஒரு சிறு புத்தகம் எழுதினார். இது 1942

ஆம் ஆண்டு வெளியாயிற்று. காந்தியடிகளுடைய புத்தகத்தில், விவசாயிகள், தொழிலாளர், மாணவர் ஆகிய இவர்களின் அமைப்புப்பற்றிய குறிப்பும் இருந்தது. ராஜேன் பாபு 13 திட்டங்களையும் விளக்கமான யோசனைகள் கூறி முடித்தபின், தம் புத்தகத்தில் இந்த மூவர் பற்றியும் தனித்தனித் தலைப்புகள் கொடுத்து, இவர்களைத் தேச நிர்மாணத்துக்கேற்ற முறையில் திரட்டி அமைப்பதற்கான யோசனைகளையும் குறிப்பிட்டிருந்தார். காந்தியடிகளுடைய புத்தகத்துக்கு விளக்கமாய் அமைந்த இச் சிறு நூல் தொண்டர்களுக்கும் ஊழியர்களுக்கும் வழி காட்டியாகவும் பேருதவியாகவும் அமைந்துள்ளது.

இரண்டாம் பதிப்பில், காந்தியடிகளுடைய 13 திட்டங்களோடு இம் மூவர் பற்றிய திட்டங்களையும் சேர்த்து 16 ஆக்கி, இவற்றோடு ஆதிவாசிகள், குஷ்டரோக நிவாரணம் என்ற இரண்டு புதுத் திட்டங்களையும் சேர்த்து 18 ஆக்கினர். ஆதிவாசிகள் என்பது இந்த நாட்டின் பழங்குடிகளாகிய நாகரிக வாழ்க்கையில்லாத ஆதிக்குடிகளைக் குறிக்கும். இவர்கள் முன்னேற்றத்துக்காக நாம் உழைப்பது அவசியம் என்பதை அவர் ஹரிஜன் பத்திரிகையில் எடுத்துச் சொல்லி நிர்மாணத் திட்டத்தில் இது பதினான்காவது அங்கமாகச் சேர்க்கத் தக்கது என்று அவரே குறிப்பிட்டிருந்தார். ராஜேன் பாபு எழுதிய புத்தகத்தில் தீண்டாமை என்ற தலைப்பில் ஆதிக்குடிகள் பற்றிய குறிப்பும் சேர்த்திருக்கிறார். அக் குறிப்பு இத் தமிழ்ப் புத்தகத்தில் தனியே பிரித்துச் சொல்லப் பட்டுள்ளது.

குஷ்டரோக நிவாரணம், காந்தியடிகள் மனத்துக்கு வந்த சேவையாதலினால், அதுவும் பின்னர் நிர்மாணத் திட்டத்தில் ஓர் அங்கமாக இடம் பெற்றிருக்கிறது.

இப்புத்தகத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் சம்பந்தமாக, அரசியல் நிலைமையை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். நிர்மாணத்திட்ட நிறைவேற்றமே பூரணசுயராஜ்யம் என்று காந்தியடிகள் இதைக்குறிப்பிட்ட போது, அன்னிய ஆட்சியை அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதே பெருங்காரியமாயிருந்தது. ஆனால் 1947 ஆம் வருஷம்

ஆகஸ்டு மாதம் 15 தேதியில் இந்திய நாடு சுதந்திரம் பெற்றுவிட்டது. ஆதலால், இந்தச் சந்தர்ப்பத்தில், அன்று கூறிய திட்டங்கள் பலவற்றுக்கு நாம் புதுப் பொருள் கொள்ள வேண்டும். 'விடுதலை' என்ற சுருங்கிய பொருளில் அவற்றைக் கருத இப்போது அவசியமில்லை.

எனினும் காந்தியடிகள், தாம் லக்ஷ்யமாய்க் கொண்டிருந்த பூரண சுயராஜ்யம் இன்னும் வரவில்லையென்றும், அந்தச் சுயராஜ்யம் வருவதற்கு எல்லோரும் பாடுபடவேண்டுமென்றும் அடிக்கடி கூறிவந்தமையை நாம் மறக்க முடியாது. அரசியல் சுதந்திரம் பெற்ற இந்திய நாடு இன்னும் பொருளாதார சுதந்திரமோ, சமூக சுதந்திரமோ பெறவில்லை. ஆகவே, இவை கைகூடும்பொருட்டு நிர்மாண ஊழியர் அயராது உழைக்க வேண்டியவர்கள். இவ்விதம் உழைக்க இப்புத்தகம் இன்னும் தூண்டுகோலாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் என்பது உறுதி.

காலப் போக்கில் அனேக வகையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நம் மாகாணத்தவர் இதுபற்றிப் பெருமை கொள்ள இடமிருக்கிறது. இங்கு ஏற்பட்டுள்ள மதுவிலக்கும், சட்டபூர்வமான தீண்டாமை ஒழிப்பும், மகாத்மா காந்தியின் மனத்துக்கு ஓரளவு சாந்தியளிக்கக்கூடிய நல்ல காரியங்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்படியே ராஜேன் பாபு, பெண்ணுரிமை என்ற தலைப்பில் 'பலதார மணம் கூடாது' என்று கூறியுள்ள கருத்து சட்டபூர்வமாக நிறைவேறி வருகிறது. இவை யாவும் பெரிய வெற்றிகள். இவை சம்பந்தமாக இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள சில வேலைத்திட்டங்கள் இனி அவசியமில்லாமற் போகும். இந்த அளவுக்கு நிர்மாணம் ஏற்பட்டது என்றே பொருளாகிறது.

இவைபோல், இங்குக் கூறப்பட்டுள்ள எல்லாத் திட்டங்களும் பூரணமாக நிறைவேறிவிடுமானால், எத்தகையதொரு லக்ஷ்ய சமுதாயத்தில் நாம் வாழ்வோம்! உதாரணமாக, கதர்த் திட்டமும், ஆதாரக் கல்வித் திட்டமும் உண்மையாகவும் பூரணமாகவும் நிறைவேறுமானால், பிறகு

நாம் விரும்புவதற்கு வேறு என்ன இருக்கிறது? அந்த நிலைமையை வருவிப்பது நிர்மாண ஊழியர் கடமை. ஓயாது இக் கடமையைச் சுட்டிக் காட்டுவதே இப்புத்தகத்தின் வேலை.

மகாத்மா காந்தியின் மறைவுக்குப்பின் 1948 ஆம் வருஷம் மார்ச்சு மாதம் சேவாகிராமத்தில் கூடிய நிர்மாண ஊழியர்கள் ஒரு சர்வோதய சமாஜம் வகுத்து, அதற்குரிய வேலைத்திட்டமாக 18 நிர்மாணத் திட்டங்களோடு பின்னும் நான்கு திட்டங்களைச் சேர்த்தார்கள், அவையாவன: 19. பசுபாலனம், 20. இயற்கை வைத்தியம், 21. துக்க நிவாரணமும் ஆபத்தில் உதவியும், 22. மற்றவை. இவற்றையும் இப்புத்தகத்தில் சேர்ப்பது பொருத்தமென்று தோன்றிய மையால், அவைபற்றி அவ்வப்போது காந்தியடிகள் முன்னமே வெளியிட்டிருந்த சில கருத்துக்களை மட்டும் தொகுத்து இப்புத்தகத்தில் அனுபந்தமாகச் சேர்த்திருக்கிறேன்.

இப்புத்தகத்தை மொழிபெயர்ப்பில் எனக்கு உதவியாயிருந்தவர் இன்று ஆதாரக் கல்வி அதிகாரியாயுள்ள ரா. வே. ருத்ரபசாமி அவர்கள். அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*மு. அருணாசலம்.*

# காந்தியடிகளின் முகவுரை

நிர்மாணத்திட்டம் என்ற புத்தகத்தை முதன் முதல் 1941 - ஆம் வருஷத்தில் எழுதினேன். இப்போது வெளியாகும் பதிப்பு, அதை முழுமையும் பரிசோதித்துத் திருத்தி எழுதிய புத்தகமாகும். இதில் அடங்கியுள்ள பகுதிகளை எந்த வரிசைக் கிரமத்திலும் இங்குத் தொகுத்து வைக்கவில்லை; முதலில் வரும் பகுதிகள் முக்கியமானவை, மற்றவை அவ்வளவு முக்கியமில்லாதவை என்று இவற்றை யாரும் கொள்ளலாகாது. வாசகரொருவர், குறித்த ஒரு விஷயம் இந்நாட்டின் சுதந்திரத்துக்கு ஆதாரமானது என்று கருதக்கூடும்; அந்த விஷயத்தைப்பற்றி இந்தத் திட்டத்தில் எதுவும் கூறாமலே இருக்கலாம்; இப்படி இருக்கக் கண்டால், அவ்விஷயம் ஏதோ தற்செயலாய் இங்கு விடுபட்டது என்றே அவர் எண்ண வேண்டும். இங்கு கொடுத்துள்ள திட்டத்தின் பகுதிகளில் ஒன்றாக அதையும் சேர்த்துக் கொண்டு, இதுபற்றி எனக்குத் தெரிவிக்க வேண்டும். குறிப்பிடத்தக்க விஷயங்கள் எல்லாவற்றையும் இங்குக் குறிப்பிட்டு முடித்ததாக நான் எண்ணவில்லை. இங்குள்ள பகுதிகள் சில முக்கிய விஷயங்களை விளக்க வந்த உதாரணங்களேயாகும். வாசகரொவ்வொருவர் மனத்திலும், இதில் சேர்க்கத்தக்க முக்கியமான புதிய விஷயங்கள் பல தோன்றக்கூடும்.

பூரண சுயராஜ்யம் அடைவதற்கு நிர்மாணத் திட்டந்தான் சத்தியமும் அஹிம்சையும் பொருந்திய வழியாகும்; வாசகர் யாவரும், நிர்மாண ஊழியர் அல்லது தொண்டராயினும் சரி மற்றோராயினும் சரி, இதைத் திட்டமாக உணர்தல் வேண்டும். நிர்மாணத் திட்டம் அனைத்தையும் நிறைவேற்றுவதே பூரண சுயராஜ்யமாகும். மிகவும் தாழ்ந்த நிலையில் தொடங்கி மிக உயர்ந்த நிலையில் பாரத சமுதாயத்தைக் கொண்டுவந்து நிறுத்துவதற்கென்றே இந்தத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலுள்ள நாற்பது கோடி மக்களும் இந்த நிர்மாணத் திட்டத்தை ஏற்று இது முழுமையும் செயலில்

கொண்டுவருகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அன்னிய ஆதிக்கத்தை ஒழிப்பதையும் சேர்த்து, பூரண சுயராஜ்யம் என்ற தொடரில் எத்தனைக் கருத்துக்கள் அடங்கக்கூடுமோ அத்தனையும் பொருந்திய பூரண சுயராஜ்யம் கைகூடுமென்பதுதான் நிர்மாணத் திட்டத்தைச் செயலில் கொண்டு வருவதன்பொருள். இதை யாரேனும் மறுக்க முடியுமா? இதில் குறைகாணுவோர் இருக்கலாம் ; நான் கூறுவதைக்கேட்டு அவர்கள் சிரிக்கவும் செய்யலாம். அவர்கள் கருத்து, இந்தத் திட்டத்தை நாற்பது கோடி மக்களும் ஒரு காலத்திலும் ஒருமித்து நிறைவேற்றப்வோவதில்லை என்பதேயாகும். அவர்கள் இப்படிப் பழிப்பதில் ஓரளவு உண்மை இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. எனினும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயல்வது பயனுடைய தென்றே நாம் மறுமொழி கூறுகிறேன். உற்சாகத்தோடு உழைக்கக்கூடிய ஊழியர் சிலரேனும் இதற்கு வேண்டும்; அவர்களிடத்து, சிறிதும் அசைக்கமுடியாத மனவுறுதி அமைதல் வேண்டும். இது அமையுமானால், வேறெந்தத் திட்டத்தை யும்போல இந்தத் திட்டத்தையும் செயலில் கொண்டுவர முடியும். வேறெத்தனையோ திட்டங்களைவிட இதை வெற்றிகரமாகவே நடத்தமுடியும். எப்படியாயினும், நமது திட்டம் அஹிம்சையைக் கொண்டு நடைபெறவேண்டுமானால், நிர்மாணத் திட்டத்தைவிட வேறுவழி எனக்குப் புலப்பட வில்லை.

சட்டமறுப்பு, தனிப்பட்டோரும் செய்யலாம்; பொது மக்கள் அனைவரும் திரளாகவும் செய்யலாம். பொதுவாக இது நிர்மாண வேலைக்கு உதவுவதாகும். ஆயுதமேந்திப் புரட்சி செய்வதற்குப் பதிலாக, எல்லாவிதத்திலும் கைக் கொள்ளத்தக்கது சட்டமறுப்பே ஆகும். ஆயுதமேந்திப் போரிடுவதற்கு எவ்வளவோ பயிற்சிவேண்டும். சட்ட மறுப்புக்கும் அவ்வளவு பயிற்சி வேண்டியதே. இரண்டுக்கும் பயிற்சி முறைகள் வித்தியாசமானவை. இரண்டிலும், சந்தர்ப்பம் நேர்ந்தால்தான் செயலில் இறங்கவேண்டிவரும்.ஆயுத

மேந்திப்போரிடுவதற்குப் பயிற்சி தருதல் என்றால், ஆயுதங்களை உபயோகிக்கப் பழகுதல் என்று பொருள்படும்; இது நாம் இன்று கண்டபடி, ஒரு வேளை அணுகுண்டில் போய் முடிந்தாலும் முடியலாம். சட்டமறுப்புக்குப் பயிற்சி தருதல் என்பது நிர்மாணத்திட்டம் என்றே பொருள்படும். ஆகவே சட்டமறுப்புச் செய்வதற்குச் சந்தர்ப்பம் வரட்டுமென்று ஊழியர் ஒரு போதும் காத்துக்கொண்டிருக்கமாட்டார்கள். நிர்மாணவேலைக்கு இடையூறு எங்கேனும் ஏற்படுமென்று தோன்றினால் அங்கே இவர்கள் சட்டமறுப்புக்குச் சித்தமாயிருப்பார்கள். எந்தச் சந்தர்ப்பத்தில் சட்டமறுப்புச் செய்யலாம், எந்தச் சந்தர்ப்பத்தில் சட்டமறுப்புச் செய்ய முடியாது என்பது இரண்டோர் உதாரணங்களால் விளங்கும். அரசியல் ஒப்பந்தங்கள் ஏற்படுவதைத் தடைசெய்ய முடியும். தடைசெய்தும் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்; ஆனால் தனிப்பட்ட நட்புரிமைகளை ஒரு போதும் தடைசெய்தல் முடியாது. இந்த விதமான தன்னலமற்ற உண்மை நட்புரிமைகளிலிருந்தே அரசியல் ஒப்பந்தங்கள் பிறக்க வேண்டும். இங்ஙனமே, ஒரு மத்திய ஸ்தாபனத்தின் மூலம் நடைபெறுகிற கதர் உற்பத்தி-விநியோக வேலை வெற்றிபெறாதபடி அரசாங்கம் செய்துவிட முடியும்; ஆனால், தனிப்பட்டோர் தாமே நூல் நூற்று உபபோகிப்பதை எந்த அதிகாரமுமே நிறுத்த முடியாது. பொது மக்கள் தாங்களே நூல் நூற்றுக் கதர் நெய்து அணியவேண்டுமென்று அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. ஆயினும் அவர்கள், சுதந்திர இயக்கத்தின் அங்கங்களில் கதரும் ஒன்று என்று புத்தி பூர்வமாகவும் மனப்பூர்வமாகவும் உணர்ந்துகொள்ள வேண்டும். சேவைக்கான இடம் கிராமமே என்று கொண்டால் தான் இது நடைபெறும். இப்படிப்பட்ட திட்டத்தை முதன்முதலாக ஏற்று நடத்த முன்வருபவர்களுக்கும் எத்தனையோ தடங்கல் ஏற்படக்கூடும். கொள்கையைச் செயலில் நடத்த முன் வந்தவர்கள் உலகெங்கும் பெருந் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறர்ர்கள். துன்பப்படாமல் சுயராஜ்யம் வந்துவிடாது. ஹிம்சை முறையில் முதன்முதலாக

அழிவது சத்தியம்தான்; அஹிம்சைமுறையிலோ, என்றும் சத்தியமே வெல்கிறது. மேலும், அரசாங்கத்தில் பதவி பெற்று வேலை செய்பவர்களை விரோதிகள் என்று கருதலாகாது. அப்படிக் கருதுவது அஹிம்சைத் தத்துவத்துக்கே முரணாகும். அவர்களை விட்டு நாம் பிரியத்தான் வேண்டும் ; நண்பர்களாய் பிரிய வேண்டுமே யொழிய, பகைவர்களாய்ப் பிரிய வேண்டுவதில்லை.

முகவுரையாகச் சொல்லிய இக்குறிப்புக்களை வாசகர் செவ்வையாய் உணர்தல் வேண்டும்; உணர்ந்தால், இந்த நிர்மாணத் திட்டம் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பது நிச்சயம். அரசியல் என்று சொல்லுகிறார்களே அதுவும், மேடைப் பிரசங்கமும் எப்படி உள்ளத்தைக் கவர்கின்றனவோ, அப்படியே இத்திட்டமும் உள்ளத்தைக் கவரும். அவற்றைவிட இது மிகவும் முக்கியமானதாயும் உபயோகமுள்ளதாயும் இருக்கும் என்பது உறுதி.

புனே, -1945-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 13 ஆம் தேதி.

************

# நிர்மாணத் திட்டம்

## முன்னுரை

நிர்மாணத் திட்டம் என்ற இந்தத் திட்டத்தை, அஹிம்சை, சத்தியம் என்ற வழிகளைக் கடைப்பிடித்துப் பூரண சுயராஜ்யத்தை அமைத்தல் என்று வேறுவிதமாகச் சொல்லலாம். இப்படிச் சொல்வது பொருத்தமுமாகும்.

சுயராஜ்யத்தை நிர்மாணிக்கும் வழிகளில் ஹிம்சை முறையும் ஒன்று என்று சிலர் கருதுகிறார்கள். இந்த முறை அசத்தியத்தையே சாதனமாகக் கொண்டதென்பது நிச்சயம். இந்த முறையைப் பின்பற்றி நாம் பெரிதும் கஷ்டப்பட்டிருக்கிறோம். இன்றைய யுத்தத்தில் நாள் தோறும் அளவற்ற சொத்தும் மக்கள் உயிரும் நாசமடைவதைப் பார்த்தாலே போதும். சத்தியமும் இங்கு பலியாவதை நாம் பார்த்து வருகிறோம்.

சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடித்துப் பூரண சுயராஜ்யம் பெறுவதென்பது, சமுதாயத்தின் ஒவ்வொரு தனிப் பகுதியும் சுதந்திரமடைவது என்று பொருள்படும். இந்தப்பகுதி சமுதாயத்தில் எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருப்பதாயினும் சரி, இனம், நிறம் அல்லது சாதி பற்றிய எந்த வேறுபாடும் இல்லாமல் இது சுதந்திரம் பெறும். இந்தச் சுதந்திரம், மற்றவர்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் விலகி நிற்பதென்று பொருள்படாது. எனவே இது, சமுதாயத்தின் ஒவ்வொரு பகுதியும் தனக்குள்ளாகவும் மற்றப் பகுதிகளோடும் தொடர்பு கொண்டு ஒழுகுவதற்கு இயைந்ததாயிருக்கும். யூக்லிட் என்ற கணித நிபுணர், கணித சாஸ்திரப்படி, 'கோடு' என்பதற்கு இலக்கணம் வகுத்தார். கோடு என்பது, அகலமே இல்லாமல் நீளம் மட்டுமே உடையது என்று அவர் கூறினார். ஆனால் நாம் வரையும் கோடு எதுவும் இந்த இலக்கணத்துக்குப் பொருந்தாது. பென்சிலை எடுத்துக் கோடு இழுத்த மாத்திரத்தில் அகலம் ஏற்பட்டுவிடும், அகலமிருந்தால் இலக்கணத்துக்குப் பொருந்தாது. அகலமில்லாவிட்டால் கோடிருப்பதே தெரியாது. இதுபோல், செயலில் வரும்போது எதுவும் கொள்கையிலிருந்து சற்றே குறைந்துவிடுகிறது. ஆகவே, பூரண சுயராஜ்யம் என்பதுங்கூட, சத்தியத்தையும்

அஹிம்சையையும் வாழ்க்கையில் நாம் எந்த அளவுக்குக் கடைபிடிக்கத் தயாராக இருக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் பூரணமாயிருக்கும்.

நிர்மாணத்திட்டம் முழுவதையும் வாசகர் தம்முடைய மனத்தில் ஒழுங்குபெற வகுத்துப் பார்க்கட்டும். இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்தினால் இதன் முடிவே நாம் வேண்டுமென்று நினைக்கிற சுயராஜ்யம் என்பது என் அபிப்பிராயம்; இந்த அபிப்பிராயத்தை வாசகரும் ஏற்றுக்கொள்வர். ' இந்த நாட்டிலுள்ள முக்கியமான கட்சிகளிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டால் அதன் படி நடக்கச் சித்தம்', என்று இந்திய மந்திரியாயிருந்த அமெரி சொல்லியதை நாம் அறிவோம். இந்த ஒப்பந்தம் என்பது, என் பாஷையில் சொல்வதானால், சாதி ஒற்றுமை உண்டானபின் ஏற்படும் ஒப்பந்தந்தானே? அவர் மனப் பூர்வமாக இப்படிச் சொன்னாரா என்பதை நாம் ஆராய வேண்டாம். ஏனெனில், அந்த ஒற்றுமை நேர்மையான முறையில், அதாவது அஹிம்சை வழியில் ஏற்படுமானால், ஒப்பந்தத்தை ஏற்று நடக்கும்படி கட்டாயப் படுத்துவதற்கான சக்தியும் அதனிடத்திலேயே அமைந்திருக்கும்.

இது நிற்க. ஹிம்சை முறையில் சுதந்திரம் பெறுவதென்ப தற்குக் கற்பனையாகவும் இலக்கணம் சொல்ல முடியாது, பூரணமாக இலக்கணமும் இல்லை. ஏனெனில், சமுதாயத்தில் எந்தக் கட்சியானது பலாத்காரத்தை மிகவும் சாமர்த்தியமாக உபயோகிக்கிறதோ, அந்தக் கட்சியே அதிகாரம் வகிப்பதென்பதே, ஹிம்சைமுறையில் சுயராஜ்யம் அடைவதன் பொருளாகும். அங்கு, செல்வ நிலையிலும் சரி மற்றெதிலும் சரி, பூரண சமத்துவத்துக்குக் கொஞ்சமும் இடமில்லை.

எனது நோக்கம், அஹிம்சை வழியில் ஒழுக வேண்டுமானால் நிர்மாணத் திட்டத்தைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று வாசகருக்கு உணர்த்துவதாகும். இதற்கு ஹிம்சை முறை சுயராஜ்யத்தைத் தரவல்லதன்று என்ற எனது வாதத்தை ஒப்புக்கொள்வதுகூட அவசியமில்லை. ஹிம்சையை ஆதாரமாகக் கொண்ட ஒரு வேலைத்திட்டத்தின் மூலம், சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள பகுதிக்கும் சுதந்திரம் கிடைப்பது சாத்தியம் என்று வாசகர் எண்ணலாம். அப்படி எண்ணுவதில் நமக்கு ஆட்சேபமில்லை. ஆனால், சமுதாயம் முழுவதும் இந்த

நிர்மாணத்திட்டத்தைப் பூர்த்தியாக நிறைவேற்றினால் ஆரந · சுதந்திரம் நிச்சயம் கைகூடும் என்பதை அவர் ஒப்புக்கொண்டால் போதும்.

இனி, இந்த நிர்மாணத்திட்டத்தின் அம்சங்கள் ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

## 1. வகுப்பு ஒற்றுமை

வகுப்புஒற்றுமை ஏற்படுவது அவசியமென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் அந்த ஒற்றுமை வெறும் அரசியல் ஒற்றுமையன்று என்பதை அவர்கள் உணர்வதில்லை. அதிகாரம் மூலமாக வகுப்பு ஒற்றுமையை உண்டாக்கலாம். ஆனால், நான் கூறுகிற வகுப்பு ஒற்றுமையானது எவ்விதத்திலும் பிளவுபடுத்த முடியாத இதய ஒற்றுமையாகும். காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும், தாம் எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் சரி, தம்முடைய வாழ்க்கையில் தாமே ஒரு ஹிந்துவாகவும் முஸ்லிமாகவும் கிறிஸ்தவராகவும் பார்ஸியாகவும் யூதராகவும் மற்ற மதத்தின ராகவும் இருந்துவர வேண்டும். சுருங்கச் சொன்னால் அவரே ஹிந்துவல்லாத பிற மதத்தினராகவும் இருந்துவரவேண்டும். இப்படி இருப்பது மேற்சொன்ன இதய ஒற்றுமை உண்டாவதற்கு முக்கியமான முதல் விஷயமாகும். காங்கிரஸ்காரர் ஹிந்து ஸ்தானத்திலுள்ள கோடிக்கணக்கான மக்களில் ஒவ்வொரு வருடைய இதயத்தையும் நேரே உணர்தல் வேண்டும். இவ்விதம் உணரும் பொருட்டு, அவர் தம்முடைய மதமல்லாத பிற மதத்தினரோடு நட்புரிமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். தம் மதத்தில் அவருக்கு எவ்வளவு பக்தி இருக்கிறதோ அவ்வளவு பக்தி மற்ற மதங்களிடத்திலும் இருத்தல் வேண்டும்.

நமது சமூகம் இவ்வளவு செம்மையான நிலைமையில் இருக்குமானால், இன்று ரயிலடிகளில் ரயில் வந்து நின்றவுடனே, தண்ணீர் கொடுப்பவர்களும் தேநீர் விற்பவர்களும் (வடஇந்தியா வெங்கும்) 'ஹிந்துப்பானி' 'முஸ்லீம் பானி' (பானி-தண்ணீர்) என்றும், 'ஹிந்துச்சா' 'முஸ்லீம் சா' (சா-தேநீர்) என்றும் கூறி விற்கக் காண்கிறோமே, இந்தக் கேவலமான கூச்சலைக் கேட்க முடியாது. சிறு பள்ளிக்கூடங்களிலும் பெரியகலாசாலைகளிலும், ஹிந்துக் களுக்கும் மற்றவர்களுக்கும் தனித்தனியான அறைகளும்

தண்ணீர்ப் பானைகளும் அமைத்திருக்கக் காண்கிறோம் நாம் குறிப்பிடுகிற சமூகத்தில் இவற்றைக் காணமுடியாது. வகுப்பு வாரியான பாடசாலைகளோ கல்லூரிகளோ ஆஸ்பத்திரிகளோ அங்கு இரா. இத்தகைய புரட்சி ஒன்றைக் காங்கிரஸ்காரர்கள் தோற்றுவிக்க வேண்டும். இந்தத் துறையில் அவர்கள் செம்மையான நெறியில் உழைக்கும் போதுகூட, அரசியல் நோக்கம் எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது. இந்த உழைப்பின் பயனாய் அரசியல் ஒற்றுமை இயல்பாகவே விளையும்.

சட்டசபைகளின் மூலம்தான் அதிகாரம் கிடைக்கிறது என்றே நெடுங்காலமாய் நினைத்து வந்திருக்கிறோம். செயல் செய்து பழக்கமில்லாமையால் வந்த சோம்பல் அல்லது மயக்கம் காரணமாக விளைந்த ஒரு பெருந்தவறு என்று தான் நான் இந்த நினைப்பைக் கருதுகிறேன். நம்மவர் இங்கிலாந்து தேச சரித்திரத்தை மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு, பார்லிமெண்ட சபைகளிலிருந்துதான் பொது மக்களுக்கு அதிகாரம் சுரக்கிறது என்று எண்ணுகிறார்கள். இது தவறு. அதிகாரம் அல்லது சக்தி உண்மையில் பொதுமக்களிடம்தான் இருக்கிறது. குறித்த ஒரு காலத்தில் இவர்கள் தங்களுக்கேற்ற பிரதிநிதிகள் என்று யாரைத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்களிடம் இந்த அதிகாரமும் சேருகிறது என்பதுதான் உண்மை. பொது மக்கள் சம்பந்தம் இல்லாதபடி பார்லிமெண்டுகளுக்கு மட்டும் தனியாக எந்த அதிகாரமும் இல்லை. அவை தனியாக இயங்கவும் முடியாது. சென்ற இருபத்தைந்து வருஷங்களாக நான் முயன்று வந்ததெல்லாம், இந்தச் சாமானிய உண்மையை மக்களுக்கு உணர்த்துவதற்கேயாகும்.

சட்ட மறுப்பென்பது சக்தியெல்லாம் திரண்டுள்ள சர்க்கரையாகும். ஒரு மக்கட் சமுதாயம் முழுமையும் சட்ட சபைசெய்யும் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுத்து, இப்படி மறுப்பதனால் வரும் துன்பமனைத்தையும் அனுபவிக்கவும் சித்தமாயிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். இந்த மக்கள் சட்டநிர்ணயம், அரசியல் நிர்வாகம் முதலிய யாவற்றையும் செயலற்று நிற்கும்படிச் செய்துவிடுவார்கள். சிறுபான்மை வகுப்பினர் எவ்வளவுதான் பலமுள்ளவர்களாயிருந்தபோதிலும், அவர்களை அடக்கப் போலீஸ் படையும் ராணுவப் படையும் ஓரளவுக்கு உபயோகப்படும். ஆனால், மக்கள் அனைவருமே

என்ன கஷ்டம் நேரினும் சகித்துக்கொள்ளத் துணிந்து விடும் பட்சத்தில், அவர்களுடைய திடமான மனவுறுதியை எந்தப் போலீஸ்படையோ அல்லது ராணுவப் படையோ சிறிதும் அசைக்க முடியாது.

மேலும், பார்லிமெண்டில் வழங்குவதுபோன்ற அரசியல் நடவடிக்கை முறையானது. அதில் அங்கம் வகிப்பவர்கள் பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க இசைந்தால்தான் பயன்படுவதாயிருக்கும். அதாவது, இந்த முறை, ஒத்த நிலையினிடையே தான் ஓரளவு வெற்றி கரமாயிருக்கும்.

இந்தியாவிலோ, நிலைமை இதற்கு மாறாக இருக்கிறது. தனித்தொகுதிகள் மூலம் பார்லிமெண்ட் அரசியல் முறையை நடத்துவதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இத்தனித்தொகுதி முறையானது வெவ்வேறான நிலையுள்ள மக்களைச் செயற்கையில் உண்டாக்கியிருக்கிறது. செயற்கையாய்த் தோன்றியுள்ள இந்த நிலையில் வாழும் மக்களை ஓரிடத்தில் ஒன்றாய்க் கூட்டியதால் மட்டும் வாழ்க்கைகளில் உண்மையான ஒற்றுமை ஏற்பட்டுவிடாது. இந்த நிலையில் ஒருவேளை சட்டசபைகள் கூடி விவகாரம் நடத்தலாம். ஆனால், உண்மையான அதிகாரமானது, நம்மை ஆள்பவர் யாராயினும் சரி அவர்களி டத்திலே தான் இருக்கும். மிகச் சொற்ப அதிகாரமே தங்கள் வசமில்லாமல் பிரித்து மக்களிடம் கொடுப்பார்கள். எச்சிலிலைக்குச் சண்டை போட்டுக்கொள்ளும் பிராணிகள் போல், இந்தச் சொற்ப அதிகாரத்தைப் பெறும்பொருட்டு மக்கள் சண்டை போடுவதற்கான இடங்களாகவே அச்சட்டசபைகள் இருக்கும். ஆள்பவர்கள் தங்கள் கோலைக் கடுமையாகவே செலுத்துகிறார்கள். மக்களிடையே பகைமையாயுள்ள தொகுதிகள் ஒன்றையொன்று தாக்காத வண்ணம் அவர்களே பார்த்துக் கொள்ளுகிறார்கள். வெட்கக்கேடான நிலைமையிலிருந்து பூரண சுயராஜ்யம் உதிப்பது சாத்தியமில்லை யென்று நான் கருதுகிறேன்.

---

இவ்விதம், என் அபிப்பிராயங்கள் கண்டிப்பானவை ஆயினும், தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் அடங்கிய சபைகள் விஷயத்தில் காங்கிரஸ் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி இவ்வபிப்பிராயங்களைச் சிறிது மாற்றிக்கொண்டிருக்கிறேன். இன்று

மேற்கூறிய ஸ்தாபனங்களில் விரும்பத்தகாத பிரதிநிதிகள் காணப்படுகிறார்கள. இந்த நிலைமை மாறாத வரையில், அவற்றில் பிற்போக்காளர் அங்கத்தினராவதைத் தடுக்கும் பொருட்டு, காங்கிரஸ் தன் அபேட்சகர்களை நிறுத்தி அங்கத்தினராக்க வேண்டுமென்றே நான் கருதுகிறேன்.

## 2. தீண்டாமை ஒழிப்பு

ஹிந்து மதத்தில் ஏற்பட்ட மாசு என்றும், சாபம் என்றும் சொல்லத்தக்கது, தீண்டாமை. இதை ஒழிப்பது எவ்வளவு அவசியம் என்பதுபற்றி இவ்வளவு காலத்துக்குப் பின் விஸ்தரித்துச் சொல்லத் தேவையில்லை. இது சம்பந்தமாய்க் காங்கிரஸ்காரர் அரிய சேவை செய்திருக்கிறார்கள் என்பது உண்மை. ஆயினும், இன்றையஅரசியல் நிலை காரணமாகச் செய்யவேண்டியிருக்கும் வேலைகளுள் ஒன்று என்றுதான் காங்கிரஸ்காரரில் அனேகர் தீண்டாமையொழிப்பைக் கருதுகிறார்கள். ஹிந்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் ஹிந்து மதமே அழியாமல் நிலைத்து நிற்பதற்கு இன்றியமையாத காரியம் என்று அவர்கள் இதைக் கருதுவதில்லை. இதைச் சொல்ல எனக்கு மிக்க வருத்தம் உண்டாகிறது. காங்கிரஸில் ஹிந்துக்களாயுள்ளவர் அரசியலைக் காரணமாகக்கொண்டு தீண்டாமை யொழிப்பில் ஈடுபடாமல் முக்கியமாய்ச் செய்யவேண்டிய சேவை என்ற எண்ணத்தோடு இதில் ஈடுபட வேண்டும். அவ்விதம் ஈடுபட்டால் இன்று சனாதனிகள் மனத்தை எவ்வளவு தூரம் மாற்ற முடிந்திருக்கிறதோ அதைவிடப் பல மடங்கு அதிகமாக மாற்றமுடியும். போரிடும் மனப்பான்மையோடு இவர்கள் சனாதனிகளிடம் போகக்கூடாது. தங்கள் அஹிம்சைக் கொள்கைக்கு ஒத்தவிதமாக அவர்களிடம் நட்புரிமையோடு போகவேண்டும். ஹரிஜனங்கள் சம்பந்தப்பட்ட வரையில், ஹிந்து ஒவ்வொருவரும் அவர்களுடைய நன்மை தீமையை தமதென்று பாவித்து ஒதுக்கப்பட்டுத் தனியாயிருக்கின்ற அந்த மக்களோடு தோழமை பூணவேண்டும். இந்தியாவில் ஹரிஜனங்கள் ஒதுக்கித் தனியே விடப்பட்டுள்ள பெருங் கொடுமையைப் பார்த்தால், இதற்குச் சமானமாக உலகத்தில் எங்குமே கொடுமை இருந்ததில்லை என்று சொல்லத் தோன்றுகிறது. தோழமை பூணும் காரியம் எவ்வளவு கஷ்டமானதென்பது

அனுபவத்தால் எனக்கும் தெரியும். ஆயினும், இதுவும் ராஜ்யமாளிகையை நிருமாணிப்பதில் ஓர் அங்கமாகும். சுயராஜ்யத்துக்குச் செல்லும் பாதை சுலபமானதன்று. குறுகலாயிருக்கும், செங்குத்தாயுமிருக்கும். வழியில் எத்தனையோ ஏற்றங்கள் வழுக்கிவிடும். பாதாளம்வரை பிளந்துள்ள வெடிப்புகளும் உண்டு. தயங்காமலும் அஞ்சாமலும் அடி எடுத்துவைத்து இந்த இடையூறுகளனைத்தையும் கடந்து முன்னேறிச் சென்றால் தான் நாம் செல்லவேண்டிய சிகரத்தை அடைந்து, சுதந்திரம் என்ற நிர்மலமான காற்றைச் சுவாசிக்கவியலும்.

## 3. மதுவிலக்கு

இதுவரையில் கூறிவந்த வகுப்புஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு என்ற அங்கங்கள் போலவே, மதுவிலக்கும் 1920 முதல் காங்கிரஸ் திட்டத்தில் இருந்து வருகிறது. சமூகத் துறையிலும் நல்லொழுக்கத் துறையிலும் இது ஒரு ஜீவாதாரமான சீர்திருத்தமாகும். எனினும், காங்கிரஸ்காரர் கிரமமாக எவ்வளவு ஆர்வம் காட்டவேண்டுமோ அவ்வளவு ஆர்வம் இதில் காட்டவில்லை. லட்சக்கணக்கான மக்கள், ஆடவரும் பெண்டிரும், குடிக்கும் போதைக்கும் இரையாகி வருகிறார்கள். அஹிம்சை முறையைக் கடைப்பிடித்து நாம் நமது லட்சியத்தை அடைய வேண்டுமானால், இந்த மக்களை நல்வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பை எதிர்காலத்தில் வரும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளட்டும் என்று இருந்துவிட முடியாது.

இந்தத் தீமையை ஒழிப்பதற்கு வைத்தியத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரு வழியில் நல்ல உதவி செய்ய முடியும். குடிகாரனையும் அபினி தின்பவனையும் அக்கொடிய பழக்கங்களிலிருந்து மீட்பதற்கான வழிகளை இவர்கள் தேடலாம்.

மதுவிலக்கு வெற்றி அடையச் செய்வதில் பெண்களுக்கும் மாணவர்களுக்கும் சிறப்பான ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. உள்ளன்போடு பணி செய்வதனால் இவர்கள் குடி முதலியவற்றில் ஈடுபட்டவர்களுடைய மனத்தைக் கவர்ந்து கொள்ள முடியும். இந்தக் கவர்ச்சியின் பயனாய், குடியை அடியோடு விட்டுவிடும்படி அவர்களுக்குப் புத்திமதி கூறி நல்ல வழிக்குக் கொண்டுவருவதும்

சாத்தியம்.

காங்கிரஸ் கமிட்டிகள், பொழுது போக்குக்கான சிற்றுண்டிச் சாலைகளும் விடுதிகளும் அமைக்கலாம். உழைத்துச் சோர்ந்துவரும் தொழிலாளி, இங்கு வந்து தன் சோர்வை நீக்கிக்கொள்ளலாம். ஆரோக்கியமான சிற்றுண்டிகளை மலிவான விலையில் பெறலாம். பொருத்தமான விளையாட்டுக்களிலும் ஈடுபடலாம். இத்தகைய வேலை, மனத்தைக் கவரக்கூடியது. நல்லொழுக்கம் தரக்கூடியது.

சுயராஜ்யம் பெற அஹிம்சை வழியில் முயல்வதென்பது ஒரு புதிய முயற்சி. இம்முயற்சியில், சிறந்தவை என்று முன்னமே கருதிய லட்சியங்களை விட்டு, புதிய லட்சியங்களைக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஹிம்சை முறையில் இப்படிப்பட்ட சீர்திருத்தங்களுக்கு இடமிராது. ஹிம்சை முறையில் ஒழுகுபவர்கள், தங்களுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில், செய்யவேண்டிய சீர்திருத்தங்களை உடனே செய்யாமல் சுயராஜ்யம் வந்தபின் பார்த்துக் கொள்ளலாம் என்றுவிட்டு விடுகிறார்கள் . இது அறியாமை என்று கூடச் சொல்லத் தோன்றுகிறது. நிலைத்த செம்மையான விடுதலை அகத்திலிருந்தே உதிப்பது. அதாவது ஆன்ம சுத்தியினால் விளைவது என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். நிர்மாண ஊழியர் செய்யும் பணி சட்டபூர்வமாக மது விலக்கு ஏற்பட வழி கோலாமலிருக்கலாம். ஆயினும், அவர்களே மதுவிலக்கு வேலை சுலபமானதாகவும் வெற்றி பெறத்தக்கதாகவும் செய்கிறார்கள்.

## 4. கதர்

கதர் என்பது விவாதத்துக்கு இடமான விஷயம். கதர்ப் பிரசாரம் செய்வதில் நான் காலப்போக்குக்கு மாறாகச் செல்கிறேன் என்று பலர் நினைக்கிறார்கள். சுயராஜ்யக் கப்பலை நான் ஓட்டினால் கப்பல் கவிழ்ந்துவிடுமென்றும், நாகரிகமற்ற பண்டைக் காலத்து வாழ்க்கையை நாட்டில் மீண்டும் நிலை நாட்ட முயல்கிறேனென்றும் அவர்கள் நினைக்கக்கூடும். விஸ்தாரமாய் எழுதவியலாத இந்த இடத்தில், கதர்தான் சுயராஜ்யத்துக்கு ஏற்றது என்பதை நான் விளக்கிக்கூறப் போவதில்லை. வேறிடத்தில் இதற்கான வாதங்களை விவரமாகக் கூறியிருக்கிறேன். காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும், அல்லது, இந்தியராயுள்ளோர் ஒவ்வொருவரும், கதரின்

வளர்ச்சிக்காக என்ன செய்யமுடியும் என்பதையே இங்கு காட்ட விரும்புகிறேன். தேசத்திலுள்ளோர் அனைவருக்கும், செல்வநிலை பொறுத்தவரையில் சுதந்திரமும் சமத்துவமும் பிறப்பதையே கதர் குறிப்பிடுகிறது. மாவின் பக்குவத்தைப் பணியாரத்தில் பார்க்கலாமல்லவா? இதுபற்றி ஒவ்வொருவரும் தாமே முயன்று பார்த்தால்தான் சொல்வதன் உண்மை புலப்படும்.

கதர் என்று சொல்லும்போது, அதனுடன் தொடர்புள்ள மற்றத் தத்துவங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். எல்லாத் துறையிலும் சுதேசிப்பொருளையே உபயோகிப்பது என்ற மனம், வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இந்தியாவிலேயே தயார்செய்வது என்ற உறுதி, அதுவும் நாட்டுப்புற மக்களின் திறமையைக் கொண்டு அவர்களையே உற்பத்திசெய்யும்படி பண்ணும் எண்ணம் ஆகிய இவையெல்லாம் கதர் என்ற தத்துவத்தோடு சேர்ந்தவை. இதன்பொருள், தற்போதுள்ள முறைகளையெல்லாம் தலைகீழாக மாற்றி யமைப்பதாகும். இன்று, இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள ஐந்தாறு நகரங்கள் தங்கள் ஆலைத் தொழில்மூலமாக ஏழு லட்சம் இந்தியக் கிராமங்களின் செல்வத்தைச் சுரண்டிப் பிழைக்கின்றன. இதனால் அந்தக் கிராமங்களும் நசித்துப் போகின்றன. இதற்குப்பதிலாக மேற்குறிப்பிட்டப்படி மாற்றியமைத்தால், இந்த ஏழு லட்சம் கிராமங்களும் பெரும்பான்மையும் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியவற்றைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்வனவாய் இருக்கும். இது மட்டுமல்லாமல், இந்தக் கிராமங்கள், இந்தியாவிலுள்ள நகரங்களுக்கு வேண்டிய சேவை செய்வதோடு, எந்த அளவுக்குச் சேவை செய்வதனால் கிராமம் வெளியுலகம் ஆகிய இருபக்கத்துக்கும் பயனுண்டோ அந்த அளவுக்கு, வெளியுலகத்துக்கும் சேவை செய்துவரும்.

இதற்கு பலருடைய மனப்போக்கில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படவேண்டும். அஹிம்சை முறையானது பல வகைகளில் மிகவும் எளியதாய் இருப்பினும், வேறு பல வகைகளில் மிகவும் கடினமானதே. அஹிம்சை முறையானது இந்தியராய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் அடிப்படையில் மாற்றி இதுவரையில் அவரிடத்திலேயே ஒரு சக்தி மறைந்திருந்ததை

அவருக்குப் புலப்படுத்தி, அச்சக்தி இருப்பதனால் அவரிடம் ஓர் ஒளி விளங்கச் செய்து, இந்திய மக்களினமாகிய பெருங்கடலிலுள்ள ஒவ்வொரு நீர்த்துளியோடும் தாம் ஒன்றியவர் என்று அவருக்கு உணர்த்தி, இந்த உணர்வில் அவர் பெருமிதமும் அடையச் செய்கிறது. இந்த அஹிம்சையானது நெடுங்காலமாக நாம் நினைத்துவந்த சோம்பல் அல்லது செயலின்மை அன்று.

இதுவரையில் மனிதசமூகம் அறிந்தசக்திகள் அனைத்திலும் இதுவே மிகுந்த வலிமை பொருந்தியது. மனிதசமூகத்தின் வாழ்வே இச்சக்தியைப் பொறுத்ததாகும். இந்தச் சக்தியையே காங்கிரசுக்குக் காட்டவும் அதன்மூலமாக உலகத்துக்குக் காட்டவும் நான் முயன்று வந்திருக்கிறேன். கதர் என்பது, என்னைப் பொறுத்தவரையில், இந்திய மக்களினத்தின் ஒற்றுமைக்கும் அதன் செல்வநிலை பற்றிய சுதந்திரத்துக்கும் சமத்துவத்துக்கும் அடையாளமாகும். ஆகவே முடிவாக, ஜவஹர்லால் நேரு கவிதை நிரம்பிய சொற்களால் சொல்லியபடி, 'கதர் தான் இந்திய சுதந்திரத்தின் சீருடை ' ஆகும்.

மேலும், கதர் அணியும் மனப்பான்மை யென்பது, வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்கள் அனைத்தையும் மத்தியமான ஒரே இடத்தில் உற்பத்திசெய்து ஒரே இடத்தின் மூலம் வினியோகம் செய்வதை ஒழிப்பது என்றே பொருள் படும். ஆகவே, ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டியவை அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொள்வதோடு, நகரத்துக்குத் தேவையானவற்றைத் தருவதற்காகச் சிறிதளவு அதிகப்படியாகவும் உற்பத்தி செய்யவேண்டும். இதுவே 'கதர்' சம்பந்தமாய் நாம் இது வரையில் வகுத்துள்ள திட்டமாகும்'.

ஆலைத்தொழில்கள் யாவும், சமுதாயத்துக்கே சொந்தமானவையாக்கி ஒரே இடத்தில் நடத்தப்பெறும். எனினும் இத்தொழிலானது தேசத்தின் விரிந்த தொழில்களில் மிகச் சிறு பகுதியேயாகும்; பெரும்பகுதி கிராமங்களில் தான் நடைபெறும்.

கதர் என்பதனோடு சேர்ந்துள்ள பிற அம்சங்கள் என்னவென்று விளக்கிய பிறகு, கதர் வளர்ச்சிக்காகக் காங்கிரஸ்காரர் என்ன செய்யவேண்டும், என்ன செய்ய முடியும் என்பதை நான் குறிப்பிடவேண்டும். கதர் உற்பத்தி என்பதில், பருத்தி பயிரிடல், செடியிலிருந்து பருத்தி எடுத்தல், கொட்டை நீக்குதல், பஞ்சு சுத்தம் செய்தல், பஞ்சு வெட்டுதல், பட்டை

போடுதல், நூல் நூற்றல், நூலுக்கு கஞ்சிபோடுதல், சாயம் போடுதல், பாவு ஆற்றுதல், தாறு சுற்றுதல், நெசவுநெய்தல், துணிவெளுத்தல் ஆகிய எல்லா வேலைமுறைகளும் அடங்கும். இவற்றில், சாயம் போடுதல் நீங்கலாக மற்றவை யாவும் முக்கியமான பிரிவுகள். இவற்றுள் ஒவ்வொன்றையும் கிராமந்தோறும் மிக்க திறமையோடும் செய்யலாம். அகில இந்திய சர்க்கா சங்கம் வேலைசெய்து வரும் கிராமங்கள் இந்தியாவில் எங்கெங்கு உள்ளனவோ அங்கெல்லாம் இவை திறமையாக நடை பெற்றுவருகின்றன.

பின்வரும் புள்ளி விவரங்கள் இது சம்பந்தமாக அறியத்தக்கவை. 1940 ஆம் வருஷத்தில் நூல்நூற்றல், நெய்தல் முதலிய தொழில்கள் 13,451 கிராமங்களில் நடைபெற்றன. தொழிலில் ஈடுபட்ட கிராமவாசிகளின் தொகை 275,146. இவர்களில் ஹரிஜனங்கள் 19,645 பேர்; முஸ்லீம்கள் 57,378 பேர். நூற்றவர்களில் பெரும்பாலோர் பெண்கள். மொத்தம் கொடுத்த கூலி ரூ.34,85,609. (சுமார் 35 லட்சம் ரூபாய்).

இவ்வளவு இருப்பினும், நடந்திருக்கும் வேலையானது, கதர் திட்டத்தைக் காங்கிரஸ்காரர் உண்மையாகவே ஏற்று நடத்தினால் ஆகக்கூடிய வேலையில் நூற்றில் ஒரு பாகந்தான். கிராமத்தில் முன்னம் இருந்துவந்த இந்த முக்கியமான கிராமக் கைத்தொழிலும் இதையொட்டிய பிற கைத்தொழில்களும் வேண்டுமென்றே அழிக்கப்பட்ட காலம் முதல், கிராமங்களிலிருந்த புத்திக்கூர்மையும் உற்சாகமும் வெளியேறிவிட்டன. கிராமங்கள் ஒளியிழந்து சோம்பலுக்கு இடமாகிவிட்டன. கிராமத்து மக்களுக்கும், பராமரிப்பில்லாமல் அவர்கள் வைத்திருக்கும் ஆடுமாடுகளுக்கும் இடையே எவ்வித வித்தியாசமும் காணமுடியவில்லை.

காங்கிரஸ்காரர், கதர் சம்பந்தமாக காங்கிரஸ் இடும் கட்டளையின்படி உண்மையாக நடப்பார்களானால் கதர்த் திட்டத்தை நடத்துவதில் அவர்கள் என்ன செய்யவேண்டு மென்பதுபற்றி அகில இந்திய சர்க்கா சங்கம் அவ்வப்போது இடும் வேலைகளை நிறைவேற்றவேண்டும். பொதுப் படையான சில விதிகளைமட்டும் இங்கே கூறவேண்டும்.

1. சிறிது நிலமுள்ள எல்லாக் குடும்பங்களும் குடும்பத்தின்

உபயோகத்துக்கு வேண்டிய அளவாவது பருத்தி பயிரிட வேண்டும். பருத்திபயிரிடுதல் மிகவும்எளிது. பீகார் மாகாணத்தில் விவசாயிகள் தங்கள் சாகுபடி நிலத்தில் இருபதில் மூன்று பங்கு அவுரிச்செடி (சாயம்) பயிரிட வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் கட்டாயப்படுத்தினார்கள். இது அயல்நாட்டு அவுரி முதலாளிகளுடைய நன்மையை உத்தேசித்து நடந்த காரியம். நம்முடைய நிலத்தில் ஒரு பகுதியில் நம்மவருக்காக நாமாகவே ஏன் பருத்தி பயிரிடக்கூடாது? கதர் சம்பந்தமான வேலை தொடங்குமிடத்திலிருந்தே, வேலையெல்லாம் நகரத்தைவிட்டுக் கிராமத்தை நோக்கி வந்துவிட்டதை வாசகர் கவனிக்கவேண்டும். இன்று பருத்தி விளைவெல்லாம் இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள ஆலைகளை நோக்கிப் போவதால், இதுவும் குவியல்முறையில் நடக்கும் தொழிலாகிவிட்டது. இந்த யுத்தத்துக்குமுன், பருத்தி முக்கியமாக இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்குமே போயிற்று. முன்பும் இன்றும், பருத்தி பணம் தரும் விளைபொருளாகும். ஆகவே, மார்க்கெட்டு விலைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு இதைப்பாதிக்கும். அதாவது, பருத்தி விற்பனை நிச்சயமில்லாதது, ஒரு சூதாட்டம் போன்றது. கதர்த்திட்டத்தின்படி, பருத்திச் சாகுபடி இந்தக் கஷ்டத்தைவிட்டு விலகுகிறது. பயிரிடுபவர் தமக்கு வேண்டியதை மட்டுமே பயிரிடுகிறார். அவர் அறிய வேண்டியதெல்லாம், தம்முடைய தேவைக்கு வேண்டியதைப் பயிரிடுவதுதான், தம்முடைய முதல்வேலை என்பதாகும். இப்படி அவர் பயிரிடும்போது, விலைகுறைந்துவிட்டது என்ற காரணத்தால் அதிகம் நஷ்டம் உண்டாகச் சந்தர்ப்பமில்லை.

2. நூற்பவர் ஒவ்வொருவரும், தமக்குச் சொந்தமான பருத்தியில்லாவிட்டால், கொட்டை நீக்குவதற்கு வேண்டிய பருத்தியை விலைக்கு வாங்கிக்கொள்வார். கொட்டை நீக்கும் வேலையைக் கைம்மனை கூடயில்லாமல் அவர்தாமாகவே எளிதில் செய்யலாம். ஒரு பலகையும் உருண்ட ஓர் இரும்புக் கம்பியும் கொண்டு அவர் தம்முடைய பருத்தியை அரைத்துக்கொள்ளலாம். இதுவும் செய்வது சாத்தியமில்லையென்று தோன்றினால், கையால் அரைத்த பஞ்சு வாங்கி, வெட்டிப் பட்டைபோட்டுக் கொள்ளலாம். தமக்கு வேண்டிய பஞ்சை, ஒரு சிறுவில்லை உபயோகித்து

அதிகச்சிரமமில்லாமலே வெட்டிக்கொள்ளலாம். எந்த அளவுக்கு உழைப்பானது ஒரே இடத்தில் போய்க் குவியாமல் இருக்கிறதோ, அந்த அளவுக்குக் கருவிகள் எளியனவாகவும் மலிவாகவும் இருக்கும். பட்டைபோட்டவுடன் நூற்கும்வேலை தொடங்குகிறது. இதற்கு, தனுஷ்தக்கிளி (வில்ராட்டை) மிகவும் சிறந்ததென்பது என் அபிப்பிராயம். இதையே நான் அடிக்கடி உபயோகித்து வருகிறேன். பெட்டிராட்டையில் நான் என்ன வேகத்தில் நூற்கிறேனோ, ஏறக்குறைய அதேவேகம் தனுஷ் தக்கிளியிலும் வருகிறது. நூற்ற நூல் அதிக மெல்லியதாயும் பலமுள்ளதாயும் சமமானதாயும் இருக்கிறது. எல்லோருக்கும் இப்படி நூல் வராமலிருக்கலாம். தனுஷ் தக்கிளியை நான் ஏன் விசேஷமாய்ச் சிபாரிசு செய்கிறேனென்றால், இதைச் செய்வது சுலபம்; பெட்டி ராட்டையை விட இது மலிவானது. அதைப்போல் அடிக்கடி பழுது பார்க்கவேண்டியிராது. பெட்டிராட்டையை உபயோகிப்பவருக்கு, இரண்டுமாலைக் கயிறுகளையும் செய்யத் தெரியவேண்டும். அவை நழுவிவிட்டால் அளவாக மாட்டத் தெரியவேண்டும். சக்கரங்கள் சுற்றவில்லை யென்றால், அவற்றைச் சரிப்படுத்தத் தெரிய வேண்டும். இவ்வளவும் தெரியாவிட்டால், ராட்டைசுழலாமல் தூங்கவேண்டியதுதான். மேலும், மக்களெல் லோரும் இப்பொழுதே நூற்கத் தொடங்க நேரலாம். அப்படித் தொடங்கினால், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய கருவி தனுஷ்தக்கிளிதான். ஏனெனில், இதுவே எளிதாகச் செய்யவும் உபயோகிக்கவும் தக்க கருவி. சாதாரணத் தக்கிளியைவிட இதைச் சுலபத்தில் செய்யலாம். இதை அவரவர் தாமே செய்து கொள்வதுதான் எளிதாகவும் மலிவாகவும் செய்து கொள்வதற்கான சிறந்த வழி. உண்மையில் சாமானியமான கருவிகளைச் செய்யவும் உபயோகிக்கவும் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது மிகவும் நல்லது. நமது நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும், பருத்தி பயிரிடுவதிலிருந்து நூல் நூற்பது வரையிலுள்ள பல வேலைகளையும் ஒருமித்துச் செய்து வருகிறார்களென்று வைத்துக்கொள்வோம். இது எவ்வளவு சிறந்த பயிற்சியாகும். என்ன ஒற்றுமைக்கு இது வித்தாகும் என்பதை எண்ணிப்பாருங்கள். எல்லோரும் உழைப்பது என்ற மாத்திரத்தில், செல்வனுக்கும் வறியவனுக்கும் இடையிலுள்ள பேதம் ஒரளவுக்கு நீங்கி, எல்லோரும் சமம் என்றாகிறது.

இவ்விதம் நூற்ற நூலை மூன்று விதமாக உபயோகிக்கலாம். ஏழை மக்களுக்குப் பயன்படுத்தும்படி இதை அகில பாரத சர்க்கா சங்கத்துக்கு அளித்துவிடலாம். அல்லது சொந்த உபயோகத்துக்காகத் துணி நெய்யலாம். அல்லது அதைக் கொடுத்து எவ்வளவு கதர் வாங்க முடியுமோ அவ்வளவு கதர் வாங்கலாம். நூல் எவ்வளவு சிறந்ததாயும் சன்னமாயும் இருக்கிறதோ அவ்வளவுக்கு அது மதிப்புயர்ந்தது என்பது தெளிவு. காங்கிரஸ்காரர் இந்த வேலையில் மனம் வைத்தால், கருவிகளை நன்றாய் அபிவிருத்தி செய்து புதிய கருவிகளையும் முறைகளையும் கண்டுபிடிக்க முடியும். நம் நாட்டில் தொழிலுக்கும் அறிவுக்குமிடையே பெருத்த பிளவு ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாய்த்தொழில் வளராமல் நின்றுவிட்டது. இரண்டும் நல்லமுறையில் கலந்திருந்தால், அதுவும் இங்கே குறிப்பிட்டுள்ளபடி கலந்திருந்தால், மதிப்பிட முடியாத பெருநன்மை இதனால் விளையும்.

நூற்பதை ஒரு வேள்வியாகக் கருதி நாடு முழுவதுமே நூற்கவேண்டும் என்ற எனது திட்டத்தின்படி, சாமானிய ஆடவரும் பெண்டிரும், தினமும் ஒரு மணிநேரத்துக்கு அதிகமாக நூற்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை.

## 5. கிராமக் கைத்தொழில்கள்

மற்றக் கிராமக் கைத்தொழில்களுக்கும் கதருக்கும் வித்தியாசமுண்டு. இவற்றில் மக்கள் தாங்களாக உழைப்பதற்கு அதிக இடமில்லை. ஒவ்வொரு கைத்தொழிலிலும் இத்தனை பேர்தான் வேலை செய்யமுடியுமென்ற வரையறை இருக்கிறது. இத்தொழில்கள் கதருக்குப் பாங்கிமார்போல அமைகின்றன. கதர் இல்லாமல் அவை இல்லை; அவையில்லாமல் கதருக்குரிய கௌரவமுமில்லை; முக்கியமான கிராமக் கைத்தொழில்கள்: கையால் நெல் அரைத்தல், கையால் மாவரைத்தல், சவுக்காரம் செய்தல், காகிதம் செய்தல், தீப்பெட்டி செய்தல், தோல்பதனிடல், எண்ணெயாட்டல் முதலிய பலவாகும். இவையில்லாமல் கிராம வாழ்க்கையில் பொருளாதாரநிலை பூர்த்தியாகாது. காங்கிரஸ் காரர் இவற்றில் சிரத்தை கொள்ள வேண்டும். அவர்கள் கிராமவாசிகளாயிருந்தால் அல்லது கிராமங்களிலேயே தங்கி

அவர்கள் வாழ்வார்களானால், இந்தக் கைத்தொழில்களுக்குப் புத்துயிரளித்துப் புதுமுறையில் வளர்க்க முடியும். கிராமத்தில் செய்தபொருட்கள் கிடைக்கும் பட்சத்தில், வேறெதையும் உபயோகியாமல் அவற்றை உபயோகிப்பதுதான் கௌரவம் என்று எல்லோரும் கருதவேண்டும். இந்தப் பொருட்களுக்குத் தேவை ஏற்பட்டால் நமக்கு வேண்டியவையனைத்தையும் கிராமங்களி லிருந்தே பெற்றுக் கொள்ள முடியுமென்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் கிராம வாழ்வில் நமது மனம் ஊன்றிவிட்டால், மேல்நாட்டைக் கண்மூடித் தனமாய்ப் பின்பற்ற எண்ணமாட்டோம். 'நவபாரதம்'. உருக்கொள்வதற்குப் பொருத்தமாக உண்மையான தேசிய மனப்பான்மை நம்மிடையே வளர்ந்துவரும். அப்போது, அதாவது நாம் கருதும் நவபாரதத்தில், வறுமையும் பட்டினியும் சோம்பலும் காண்பதற்கும் கிடைக்கமாட்டா.

## 6. துப்புரவு

அறிவுக்கும் உழைப்புக்கு மிடையே ஏற்பட்டுள்ள பிளவால், கிராமங்களின் நன்மையை நாம் அடியோடு புறக்கணித்துவிட்டோம். இது பெருங்குற்றமாகும். இதனால், அழகான குக்கிராமங்கள் அமைவதற்கு பதிலாக எங்கும் சாணக்குவியல்களையே பார்க்கிறோம். அநேக கிராமங்களுக்குச் செல்லுகிற சாலை சகிக்க முடியாததாய் இருக்கிறது. போகும்போது கண்ணை மூடிக்கொண்டு மூக்கையும் பிடித்துக்கொள்கிறோம். வழியிலுள்ள குப்பையும் அதன் துர்நாற்றமும் இவ்வளவு அதிகமாயிருக்கின்றன. காங்கிரஸ் காரரில் பெரும் பகுதியினர் கிராமவாசிகளாகவே இருப்பார்கள். இப்படி இருக்கும்பட்சத்தில், அவர்கள் எல்லாவிதத்திலும் நம் கிராமங்களைச் சுத்தத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கும்படி செய்யும் சக்தியுடையவர்களாக இருக்கவேண்டும். ஆனால், அவர்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் கிராமவாசிகளோடு ஐக்கியமாவது தங்கள் கடமையென்று ஒருபோதும் உணரவில்லை. தேசமெங்கும், சமூகமெங்கும் சுகாதாரம் நன்றாய் நிலவ வேண்டுமென்ற நல்லுணர்ச்சி நம்மிடையே அமையவில்லை. எப்படியாயினும் தினம் குளிக்க வேண்டுமென்று எண்ணுகிறோம். ஆனால், குளிப்பதற்கும் கை கால் அலம்புவது முதலிய பிற வேலைகளுக்கும் நாம் உபயோகிக்கும் கிணற்றையோ

குளத்தையோ வாய்க்காலையோ அசுத்தமாக்கத் தயங்குவதில்லை. இந்தக் குறைபாட்டைப் பெரும் பாவமென்றே நான் கருதுகிறேன். நம் கிராமங்களும் எவ்வளவோ புனிதமான நம் நதிகளின் புனிதமான கரைகளும், மிகவும் இழிந்த நிலையில் இருப்பதற்கும் ஆரோக்கியமின்மையால் வரும் பலவகை நோய்களுக்கும், இந்தக் குறைபாடே காரணமாகிறது.

## 7. ஆதாரக்கல்வி

**இது ஒரு புது விஷயம்.** இதில் காங்கிரஸ் காரியக் கமிட்டி **அங்கத்தினர் மிக்க சிரத்தை**கொண்டு 'ஹிந்துஸ்தானி தாலிமி **சங்கம்'** என்ற அகில இந்திய கல்விச் சங்கத்தை அமைக்கச் செய்தார்கள். இது ஹரிபுரா காங்கிரஸ் நடந்ததுமுதல் வேலை செய்துவருகிறது. காங்கிரஸ்காரர் அனேகர் வேலைசெய்வதற்கு இது விரிவான சந்தர்ப்பமளிக்கிறது. நாட்டுப்புறத்துச் சிறு பிள்ளைகளைச் சிறந்த கிராமவாசிகளாகக் கல்வி பயிற்றி வளர்ப்பதே இந்தக் கல்விமுறையின் நோக்கமாகும். நாட்டுப் புறத்துக்கென்று தான் இது ஏற்பட்டிருக்கிறது. இந்த முறை வகுப்பதற்கான தூண்டுதல் கிராமவாழ்க்கையிலிருந்தே பிறந்தது. ஆழத்திலுள்ள அடிப்படையிலிருந்து சுயராஜ்யமென்ற மாளிகையைக் காங்கிரஸ்காரர் நிருபிக்க விரும்பினால், குழந்தைகளின் கல்வியை அசட்டை செய்யமுடியாது. நம் நாட்டில் இதுவரையும் நடைபெற்ற அன்னிய ஆட்சியானது குழந்தைகளுக்குக்கல்வி பயிற்றும் துறையில்தான் தொடங்கிற்று. ஒரு வேளை அறியாமலே இவ்வாறு தொடங்கி இருக்கலாம். ஆனால் தொடக்கம் இங்கு தான் என்பது நிச்சயம். இன்று நம்நாட்டிலுள்ள ஆரம்பக்கல்வி என்பது வெறும் கேலிக்கூத்து. இது கிராம இந்தியாவுக்கு என்ன தேவை என்பதைச் சிறிதும் கவனியாமலே ஏற்படுத்திய கல்வி முறையாகும். நகரங்களின் தேவையைக் கூட இது கவனிக்கவில்லை. ஆதாரக் கல்வியானது நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள எல்லாக் குழந்தைகளையும், இந்தியப் பண்பாட்டில் மிகச் சிறந்தது எதுவோ, நித்தியமானது எதுவோ, அதனோடு கலந்து வளரச் செய்கிறது. இது உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே வளர்க்கிறது. மக்களைக் கிராமவாழ்க்கையிலேயே தோயும்படி செய்கிறது. எதிர் காலத்தைப்

பற்றிய அற்புதமான கனவு அவர்கள் உள்ளத்தில் அமைகிறது. சிறுவனும் சிறுமியும் பள்ளிக்கூடத்தில் வாழ்க்கை தொடங்குவது முதற்கொண்டே இந்தக் கனவை நனவாக்குவதில் தங்களுக்குரிய பங்கைச் செய்துவருகிறார்கள். காங்கிரஸ்காரர் இந்த வேலையை மேற்கொண்டால், தங்கள் ஆர்வத்தை எல்லாம் இது கவர்ந்துவிடக் காண்பார்கள். அவர்களுக்கும், எந்தக் குழந்தைகளோடு அவர்கள் பழகுகிறார்களோ அந்தக் குழந்தைகளுக்கும் இந்தக் கல்வியால் பெரு நன்மை விளையும். இதில் விருப்பமுள்ளவர்கள் சேவாகிராமத்திலுள்ள ஹிந்துஸ்தானி தாலிமி சங்கக்காரிய தரிசியோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## 8. வயதுவந்தோர் கல்வி

காங்கிரஸ்காரர் இதுபற்றிச் சிறிதும் கவனம் செலுத்தாமல் விட்டது பெரிதும் வருந்தத்தக்கது. கவனம் செலுத்திய இடத்திலுங்கூட, எழுத்து வாசனையற்றவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுப்பதே போதுமென்று எண்ணிவிட்டார்கள். இது சரியன்று. வயதுவந்தோருக்குக் கல்வி பயிற்றும் வேலையை நான் செய்துவருவேனானால், 'நம்முடைய நாடு எவ்வளவு பெரியது, எவ்வளவு உன்னதமானது' என்பதை உணரத்தக்க வகையில், வயது வந்தோர் உள்ளம் விரியச் செய்வதே என் முதல் வேலையாக எண்ணுவேன். கிராமவாசிக்கு, இந்தியா முழுமையும் அவருடைய கிராமத்திலேயே அடங்கியிருக்கிறது. வேறு கிராமத்துக்கு அவர் சென்றால், 'தம் சொந்தக் கிராமமொன்றுதான் தமக்குரிய இடம்' என்ற பாவனையில் அவர் பேசுகிறார். ஹிந்துஸ்தானமென்பது, அவருக்கு பூகோள சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள வெறும் பெயர்தான். கிராமங்களில் எவ்வளவு அறியாமை குடிகொண்டிருக்கிறது என்பதை நாம் சிறிதும் அறியோம். அன்னிய ஆட்சி என்ன வென்றோ, அதனால் வந்த தீமைகள் என்னவென்றோ கிராமவாசிகளுக்குச் சிறிதும் தெரியாது. சொற்பம் அவர்களுக்குத் தெரிந்ததைக் கொண்டு அன்னியர் என்றாலே அவர்கள் மனத்தில் பேரச்சந்தான் பிறக்கிறது. அன்னியரிடத்திலும் அன்னிய ஆட்சியிலும், நடுக்கமும் வெறுப்புமே இதன் பயனாகும். இவற்றை அகற்ற அவர்கள் சிறிதும் வழியறியவில்லை. தங்களுடைய சொந்த பலவீனத்தாலும், அன்னிய ஆட்சியை ஒழிப்பதற்குத்

தங்களிடம் பலமிருக்கிறதென்பதைத் தாங்கள் அறியாமையாலுமே அன்னியர் இங்கு வந்து ஆள்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை. ஆகவே, வயது வந்தோருக்கு நான் கல்வி கற்பிப்பதென்றால், முதலாவதாக வாய்மொழி மூலமாய் அவர்களுக்கு அரசியல் விஷயங்களைத்தான் கற்பிப்பேன். இதைத் தெளிவாகத் திட்டம் போட்டுக் கற்பிக்கலாம். எனவே, எவ்வித அச்சமும் வேண்டியதில்லை. காலம் பெரிதும் முன்னேறிவிட்டது. இவ்விதக் கல்வியில் அதிகாரிகள் தலையிடமுடியும் என்று நான் எண்ணவில்லை. தலையிட்டால், அடிப்படையான இந்த உரிமைக்காக நிச்சயம் போராட வேண்டும். இப்படிப்பட்ட உரிமையில்லாமல் சுயராஜ்யம் இல்லை. நான் சொல்லியவையனைத்திலும், வெளிப்படையாக வேலை செய்வதையே கருத்தில் கொண்டிருக்கிறேன் என்பது தெளிவு. அஹிம்சையானது அச்சத்தைக் கண்டு அருவருக்கும். எனவே, ரகசியத்துக்கு அங்கு இடமில்லை. வாய்மொழியாகக் கற்பிப்பதனோடு கூடவே எழுத்துபடிப்பும் சொல்லித்தரலாம். இந்தத்திட்டத்தில் இது சிறப்பான ஓர் அம்சமாகும். கல்விப் பயிற்சிக்குக் கலா சாலைகளில் இன்று செலவாகிற பல வருஷக் கால அளவை எப்படிக் குறைப்பதென்பதுபற்றி அநேக முறை களை அனுஷ்டித்துப் பார்க்கிறார்கள். நான் இங்குக் கூறிய அபிப்பிராயத்தை உருவாக்கி ஊழியர்களுக்கு வழிகாட்டும் பொருட்டு, கல்வி நிபுணர்கள் அடங்கிய ஒரு கழகத்தை காங்கிரஸ் காரியக்கமிட்டி நியமிக்கலாம். இக்கழகம் நிரந்தரமாகவோ சிறிது காலத்துக்கோ வேலை செய்யலாம். இங்கு நான் கூறியுள்ளவை, கல்வி சம்பந்தமாக என்ன செய்யலாமென்ற வழியைச் சுட்டிக்காட்டுகின்றது. சாதாரணக் காங்கிரஸ்காரர் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி இதில் ஒன்றும் சொல்லவில்லை. தவிர, இதற்கென்றே சிறப்பான திறமைபெற்றவர்கள் இவ்வேலை செய்யலாமேயன்றி, காங்கிரஸ்காரர் எல்லாருமே இவ்வேலை செய்தல் இயலாது. எனினும், உபாத்தியாயர்களாயுள்ள காங்கிரஸ்காரர்கள், நான் கூறியுள்ள கருத்துக்களுக்குப் பொருத்தமாகப் பயிற்சி திட்டமொன்று எளிதில் வகுத்துக்கொள்ளலாம்.

## 9. பெண்ணுரிமை

சத்தியாக்கிரக இயக்கமானது இருளில் மூழ்கிக்கிடந்த நம் சகோதரிகளை வெளிவரச் செய்திருக்கிறது. இவ்வளவு சுருங்கிய காலத்துக்குள் வெறெந்த இயக்கமும் இவ்விதம் செய்திருக்க முடியாது. இருந்தபோதிலும், இன்றைய சுயராஜ்யப் போராட்டத்தில் ஆண்களோடு பெண்களும் சமஅங்கம் வகிப்பதற்கானவற்றைச் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி காங்கிரஸ்காரருக்கு இன்னும் ஏற்படவில்லை. இதனால்தான், இந்த நிர்மாணத் திட்டத்தில் பெண்ணுரிமை பற்றிய சேவையையும் சேர்த்திருக்கிறேன். சேவை ஏன்ற துறையில் பெண்ணும் ஆடவனோடு உண்மையான தோழமை பூண்டு ஒழுகவேண்டுமென்பதை அவர்கள் உணரவில்லை. பழக்கவழக்கங்களும் சட்டங்களும் பெண்ணை அடக்கிவைத்தே வந்திருக்கின்றன ; பழக்கவழக்கங்களும் சட்டங்களும் ஆடவன் வகுத்தனவேயன்றி, பெண்வகுத்தனவல்ல. அஹிம்சையை அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கைமுறையில், ஆடவன் தன் வாழ்க்கையை நிர்ணயிப்பதற்கு என்ன உரிமையிருக்கிறதோ அதே உரிமை பெண்ணுக்கும் அவள் வாழ்க்கையை நிர்ணயிப்பதில் இருக்கும். ஆயினும், அஹிம்சை முறையில் அமைந்த மக்கட் சமூகத்தில் உரிமையென்பது தனியாக இல்லை; முன்னமே கடமையை நிறைவேற்றினால்தான் பின்னர் உரிமை பிறக்கிறது. பரஸ்பரம் இருவருடைய கூட்டுறவாலும், ஒருவர் மற்றவருடைய அபிப்பிராயத்தைக் கலந்துகொள்ளுவதாலுமே சமூகத்தின் பழக்கவழக்கங்கள் நிர்ணயமாகின்றன என்பது இதனால் ஏற்படுகிறது. இவை அன்னியர் கொண்டுவந்து திணிப்பவையல்ல. பெண்களோடு பழகுவதிலும் வாழ்க்கை நடத்துவதிலும் ஆடவர் இந்த உண்மையைப் பூரணமாய் உணரவில்லை. பெண்களைத் தங்கள் தோழியராகவும் சக ஊழியராகவும் கருதுவதைவிட்டு, அவர்களுக்குத் தாங்கள் எஜமானர்களென்றே ஆடவர் கருதி வந்திருக்கிறார்கள். இந்த வழக்கத்தை மாற்றிப் பெண்களின் நிலையை உயர்த்தும்பணி இன்று காங்கிரஸ்காரருக்குக் கிடைத்திருக்கிறது. பழங்காலத்தில் அடிமைகள் இருந்த நிலையில் இன்று பெண்கள் இருக்கிறார்கள்; அடிமைகளுக்குத் தாங்கள் சுதந்திரமாய் இருக்கமுடியுமென்பதோ சுதந்திரமாய்த்தான் இருக்க வேண்டுமென்பதோ தெரியாது; இந்த நிலையில், சுதந்திரம்

வந்தவுடனே என்னது செய்வதென்றே அந்த அடிமைகளுக்குத் தெரியவில்லையாம்! ஆடவர்களுக்குத் தாங்கள் அடிமைகளே என்று கருதும்படித்தான் பெண்களை நாம் பயிற்றிவந்திருக்கிறோம். பெண்கள் தங்கள் பூரணமான தகுதி என்னவென்பதை உணர்ந்து ஆடவரோடு சரிசமமாகக் கலந்து வேலை செய்ய வல்லவர்களாகும்படி செய்வது காங்கிரஸ்காரர் செய்யவேண்டிய பெரும் பணியாகும்.

மனவுறுதிமட்டும் இருக்குமானால், இவ்விதப் புரட்சி உண்டுபண்ணுவது பெரிதன்று. காங்கிரஸ்காரர் தங்கள் தங்கள் குடும்பங்களிலேயே இந்தச் சீர்திருத்தத்தைத் தொடங்கலாம். ஆடவர் தங்கள் மனைவியரை வெறும் பதுமைகளாக வைத்துக் கொஞ்சிக் குலாவினால் போதாது. பொதுவான சேவையில் உடன் உழைக்கிற தோழரைப்போல கௌரவமாக அவர்களை நடத்தவேண்டும். இதன் பொருட்டு, பள்ளிக்கூடம் சென்று அதிகம் படித்திராத பெண்களுக்கு அவர்களுடைய கணவன்மார் முடிந்த அளவு கல்வி போதிக்கவேண்டும். அன்னையராகவும் புதல்வியராகவும் உள்ள பெண்களுக்கும் இதே அபிப்பிராயம் பொருந்தும்.

இந்திய நாட்டுப் பெண்கள் இன்றுள்ள பரிதாபகரமான நிலையைக் குறித்து நான் கூறியதவ்வளவும் ஒருதலைப்பட்சமாகச் சொன்னதென்று சிலர் கருதலாம். நாட்டுப்புறங்களில் பொதுவாகப் பெண்கள் ஆண்களுக்குச் சமமான திறமை பெற்றிருக்கிறார்கள்.சில விசயங்களில் ஆண்களே அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்கள். இது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் இவர்கள் தொடர்பைப் புறத்தே இருந்து பட்சபாதமில்லாமல் பார்க்கும் அன்னியருக்கு, சட்டபூர்வமாகவும் சம்பிரதாய பூர்வமாகவும் இந்நாட்டில் பெண்களுக்குள்ள ஸ்தானம் மிகவும் மோசமானதென்றும், இதை அடியோடு திருத்தவேண்டுமென்றுமே தோன்றும்.

## 10. உடல் நலம்

துப்புரவு வேலையைப்பற்றி முன்னமே சொல்லியாயிற்று. அப்படியிருக்க, உடல் ஆரோக்கியம் ,சுகாதாரம் முதலியவற்றைப் பற்றிய பயிற்சியை ஏன் தனியே குறிப்பிட வேண்டும் என்று

கேட்கலாம். துப்புரவு வேலையோடு இதையும் சேர்த்திருக்கலாம். இருந்தாலும் இந்த அம்சங்களைப் பிரித்துவைக்கவே நான் விரும்புகிறேன். வெறும் துப்புரவு வேலையைச் சொல்லிவிட்டால் மட்டும்,ஆரோக்கியமும் சுகாதாரமும் அதனுள் அடங்கமாட்டா. ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் கலையும், சுகாதார அறிவும், தனியே நன்றாகப் பயின்று அனுபவத்தில் கொண்டுவரவேண்டிய விசயங்கள். செம்மையாக அமைந்த மக்கள் சமூகத்தில் நாட்டுமக்கள் ஆரோக்கிய விதிகள், சுகாதார விதிகள் என்னவென்று அறிந்து அவற்றின்படி நன்றாக ஒழுகுவார்கள். இந்தவிதிகளை அறியாமையாலும், அறிந்து அவற்றின்படி நடக்காமையாலுமே மக்களினத்தை இன்று பீடித்துவருகிற நோய்களெல்லாம் உண்டாயிருக்கின்றன. இதில் சிறிதும் சந்தேகமில்லை. நம் நாட்டில் மரணவிகிதம் அதிகமாக இருக்கிறது. இதற்கு நம்மை அரித்துத் தின்னும் கொடியவறுமை ஒரு காரணம். எனினும் ஆரோக்கியம் பற்றிய கிரமமான அறிவு நம் மக்களுக்கு ஏற்பட்டிருக்குமானால், இந்த மரணவிகிதத்தை எவ்வளவோ குறைக்கமுடியும். உள்ளம் நலமாயிருக்குமானால் உடலும் நலமாயிருக்குமென்பது மனிதகுலத்துக்குரிய முதல் விதி. உடல் நலமாயிருக்கும்போது உள்ளமும் நலமாயிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். உள்ளத்துக்கும் உடலுக்கும் தவிர்க்க முடியாத தொடர்பு ஒன்றிருக்கிறது. செம்மையான உள்ளம் மட்டும் நமக்கு இருக்குமானால் எல்லாவித ஹிம்சையையும் நாம் விட்டுவிடுவோம். ஆரோக்கிய விதிகளை இயற்கையாகவே அனுசரித்து வந்து சிறிது முயற்சியும் இல்லாமலே ஆரோக்கியமான உடலும் பெற்றிருப்போம். ஆகவே நிர்மாணத் திட்டத்திலுள்ள இந்த அம்சத்தை எந்த காங்கிரஸ்காரரும் சிறிதுகூட அசட்டை செய்யலாகாதென்று நான் கருதுகிறேன். ஆரோக்கியத்திற்கும் சுகாதாரத்திற்கும் அடிப்படையாயுள்ள விதிகள் மிகவும் எளியவை. சுலபமாய் இவற்றை அறியலாம். இவற்றின்படி ஒழுகுவதுதான் கஷ்டம். சில விதிகளை கீழே காண்க.

1. சிந்தையைத் தூய்மை செய்க. மாசு படிந்த பயனற்ற சிந்தனைகளை அகற்றுக.
2. இரவும் பகலும் தூய்மையான காற்றையே உட்கொள்க.
3. உடல் உழைப்பும் மூளையின் வேலையும் ஒத்திருக்கும்படி செய்க.

4. நிமிர்ந்து நிற்க, நிமிர்ந்து உட்காருக. செய்கிற ஒவ்வொரு செயலிலும் சுத்தமாகவும் துப்புரவாகவும் இருக்க. இச்செயல்கள் யாவும் உள்ளத்தின் சீலத்திற்கு உரிய வெளிப்பாடாக அமைய வேண்டும்.

5. மக்களுக்கு சேவை செய்வதற்கான வாழ்க்கைக்காகவே உணவு கொள்க. போகங்களை அனுபவிப்பதற்கென்று எவரும் வாழ்தலாகாது. ஆதலால் உடலும் உள்ளமும் செம்மையாக இருப்பதற்கு வேண்டிய அளவு மட்டும் உணவு கொண்டால் போதுமானது. உணவு எத்தன்மையோ மனிதனும் அத்தன்மை யாகிறான்.

6. குடிக்கும் நீரும் உண்ணும் உணவும் காற்றும் சுத்தமாயிருத்தல் வேண்டும். நாம் மட்டும் சுத்தமாயிருந்தால் போதாது. நமக்கு இந்த மூன்று வகையான புறத்தூய்மை எவ்வளவு அவசியமோ, அவ்வளவு தூய்மையாக நம்மைச் சுற்றியுள்ளவை யாவும் இருக்கும்படி செய்தல் வேண்டும்.

## 11. தாய் மொழி

நம்முடைய தாய்மொழியைவிடச் சிறப்புடையதாக ஆங்கிலமொழியைக் கருதி வந்திருக்கிறோம். இதன் பயனாய் கல்வி கற்று அரசியல் உணர்ச்சி படைத்த மக்களுக்கும் பாமரமக்களுக்குமிடையே பெருத்த பிளவு ஏற்பட்டிருக்கிறது. இந்திய நாட்டுமொழிகள் வளம்குன்றிவிட்டன. தனித்த சிந்தனைகளைத் தாய்மொழியில் வெளியிட நாம் வீணே முயன்று சங்கடப்படுகிறோம்.அறிவியல் கலைகள் பற்றிய ஆங்கிலச் சொற்களுக்கு நேரான சொற்கள் நம் மொழிகளில் அமையவில்லை. இது பெருங்கேட்டை விளைவித்திருக்கிறது. தற்கால அறிவியல் நுட்பங்கள் எவையும் பாமர மக்களுக்குத் தெரிய வழியில்லை. இந்திய நாட்டுப் பழஞ்சிறப்புடைய மொழிகளை இவ்விதம் புறக்கணித்ததனால் இந்தியாவுக்கு எவ்வளவு கேடு செய்திருக்கிறோ மென்பதை, இதே காலத்தில் நாமும் வாழ்வதால் நாம் இப்போது சரியாக அளவிடமுடியாது. இடையிலே சிறிது காலம் சென்றால்தான் இக்கேடு எவ்வளவு பெரியதென்று சொல்லமுடியும். இந்தக் கேட்டை அகற்றினாலொழிய, பாமர மக்களின் உள்ளம் வளர வகையின்றிச் சிறைப்பட்டே இருக்கநேருமென்பதை எளிதில்

உணரலாம். சுய ராஜ்யத்தை நிர்மாணம் செய்வதில் பாமர மக்கள் உருப்படியான எப்பங்கும் கொள்ளமுடியாது. சுதந்திர இயக்கத்துக்கு ஒவ்வொரு மனிதரும் தம்மாலான அளவு உதவிசெய்து அதில்பங்கு கொள்ள வேண்டும். அஹிம்சையைக் கடைப்பிடித்துச் சுயராஜ்யம் அடைவது என்பதன் கருத்து இதுவேயாகும். சுயராஜ்யத்தை நோக்கி நாம் எடுத்துவைக்கும் ஒவ்வோர் அடியையும் அதன் பூர்ணமான பொருளையும், பாமரமக்கள் தெளிவாக உணர்ந்தாலன்றி, சுதந்திர இயக்கத்தில் அவர்கள் பூர்த்தியாய்க் கலந்துகொள்ள முடியாது. நமது முயற்சியையெல்லாம் தாய்மொழியில் விளக்கிச் சொன்னாலொழிய இது சாத்தியமில்லை.

## 12 நாட்டுப்பொது மொழி

இனி, அகில-இந்திய விவகாரங்கள் இருக்கின்றன. இந்திய மொழிகளிலிருந்து, மக்களில் பெரும்பான்மையோர் தெரிந்து புரிந்து கொள்ளக்கூடியதும் மற்றவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியதுமான ஒரு பொதுமொழி வேண்டும். இந்த மொழி ஹிந்துஸ்தானி என்பதில் விவாதத்துக்கு இடமில்லை. வட இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லீம்களும் இந்த மொழியே பேசுகிறார்கள். புரிந்துகொள்ளுகிறார்கள். உருது லிபியில் எழுதும்போது இதையே உருது என்கிறார்கள். காங்கிரஸ் மகாசபையானது 1925 - ஆம் வருஷம் கான்பூரில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் பிரசித்தி பெற்றது. அத்தீர்மானத்தில் இந்த அகில-இந்திய மொழியை 'ஹிந்துஸ்தானி' என்று குறிப்பிட்டிருக்கிறது. அதுமுதல் ஹிந்துஸ்தானியே கொள்கையளவிலேனும் நாட்டுப் பொது மொழியாக இருந்திருக்கிறது. கொள்கையளவில் என்று நான் சொல்வதற்குக் காரணம், காங்கிரஸ்காரர் அனைவரும் எந்த அளவில் இதை உபயோகத்துக்குக் கொண்டுவர வேண்டுமோ அந்த அளவுக்குக் கொண்டுவரவில்லை. பாமரமக்களுக்கு அரசியலறிவு ஊட்டுவதற்குத் தாய்மொழிதான் உதவக்கூடியது. இந்தியா முழுமைக்கும், அரசியல் உணர்ச்சிபெற்ற மக்கள் அனைவரும் பேசக்கூடிய பொது மொழியொன்று இருத்தல் வேண்டும்; அகில-இந்தியக் காங்கிரஸ் கூட்டங்களில் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் வருகிற காங்கிரஸ்காரர்கள் இந்த

மொழியை எளிதில் புரிந்துகொள்ளத் தக்கதாய் இருத்தல் வேண்டும். இந்த இரண்டைப்பற்றியும் அதாவது தாய்மொழிகளையும் நாட்டுப் பொதுமொழியையும் ஏற்றுக்கொண்டு வளர்ப்பதற்கு, 1920-ஆம் வருஷத்தில் ஒரு முயற்சி ஆரம்பமாயிற்று.

மேற்கூறிய தீர்மானத்தை எல்லாக் காங்கிரஸ்காரரும் நிறைவேற்றவில்லை என்பதை வருத்தத்தோடு நான் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இதனால் காங்கிரஸ்காரர் ஆங்கிலத்தில் பேசுகிற வெட்ககரமான காட்சியையும், தங்களுக்காக வேண்டி மற்றவர்களையும் ஆங்கிலத்தில் பேசச் செய்யும் காட்சியையும் பார்க்கிறோம். ஆங்கிலமொழியின் மீது நமக்குள்ள மோகம் இன்னும் தணியவில்லை. இந்த மோகத்தில் நாம் மயங்கிக்கிடப்பதால் தன் லக்ஷ்யத்தை நோக்கி இந்தியா செல்வதில் நம்மால் தடை ஏற்படுகிறது. ஆங்கிலம் கற்றுக்கொள்ள எவ்வளவு காலம் செலவிட்டோமோ அவ்வளவு காலம் ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்வதில் செலவிட நாம் சித்தமாயிருக்க வேண்டும். இல்லையானால் பாமர மக்களிடம் நமக்கு அன்பு உண்டு என்று சொல்வதெல்லாம் போலிதான்.

## 13. பொருளாதார சமத்துவம்

அஹிம்சை வழியில் அடைய வேண்டிய சுதந்திரத்துக்கு இதுவே அச்சாணி போன்றது. முதலாளித்தனத்துக்கும் தொழிலுக்குமிடையே என்றுமே ஒரு போராட்டம் இருந்து வருகிறது. அதை ஒழிப்பதே பொருளாதார சமத்துவம் ஏற்பட உழைப்பதாகும். தேசத்தின் செல்வத்தில் பெரும்பகுதி சிலரிடத்தில் மட்டும் குவிந்திருக்கிறது. ஆனால் கோடிக்கணக்கான மக்கள் உண்ணவும் உடுக்கவும் வகையில்லாது அவதியுறுகிறார்கள். பொருளாதார சமத்துவம் என்றால், ஒருபுறம் இவ்விதம் குவிந்த செல்வத்தைக் கரைப்பதும், மறுபுறம் மேற்சொன்ன அவதியைப் போக்கி மக்களை உயர்த்துவதுமேயாகும். செல்வருக்கும் உணவற்ற கோடிக்கணக்கான ஏழை மக்களுக்குமிடையே இவ்வித வேற்றுமை இருக்கிற வரையில், அஹிம்சை முறையில் அரசாட்சி நடத்துவது சாத்தியமில்லை என்பது தெளிவு. அலங்காரமான அரண்மனைகள் ஒருபுறமும் பக்கத்தில் ஏழைதொழிலாளி மக்கள் வாழ்கிற கேவலமான குடிசைகள் மறுபுறமும் இருப்பதைப் புது டில்லியில்

பார்க்கிறோம். சுதந்திர இந்தியாவில் இந்த வேற்றுமை ஒரு நாள் கூடக்காணமுடியாது. அங்கு நாட்டில் செல்வருக்கு என்ன அதிகாரமுண்டோ அதே அதிகாரம் ஏழை மக்களுக்குமிருக்கும். செல்வர் தங்கள் செல்வத்தையெல்லாம் துறந்து செல்வத்தால் வந்த அதிகாரத்தையும் விட்டு, பொது நன்மைக்காக இவற்றைப் பங்கிட்டுத்தந்தாலின்றி, என்றைக்காவது ஒரு நாள் பயங்கரமான ரத்தக்களரி ஒன்று ஏற்படுவது நிச்சயம்.

செல்வத்துக்கு தர்மகர்த்தாக்கள் என்ற முறையில் செல்வர் வாழவேண்டும் என்பதே எனது கொள்கை. இதை அனேகர் குறைகூறுகிறார்கள். எனினும், இக் கொள்கையில் எனக்கு உறுதிகுறையவில்லை. இந்த நிலை அடைவது கஷ்டமென்பது உண்மை. அஹிம்சையைக் கடைப்பிடிப்பதும் கஷ்டமே. இது செங்குத்தான மேட்டில் ஏறுவது போன்றது. எப்படியேனும் ஏறிவிடுவது என்றே 1920 ஆம் வருஷத்தில் நாம் முடிவுசெய்தோம். நாம் படும் சிரமத்துக்கு நல்ல பலன் உண்டு. இதன் மூலம் அஹிம்சைவழியில் நமக்குள்ள ஈடுபாடு நாளுக்கு நாள் வளர்ந்து வரும். ஏன், அஹிம்சைவழிதான் மேலானது என்பதைக் காங்கிரஸ்காரர் எல்லோரும் நன்றாய்ச் சிந்தித்துத் தெரிந்து கொள்வார்கள் என்றே எதிர்பார்க்கிறோம். இப்போதுள்ள ஏற்றத் தாழ்வுகளை ஹிம்சை முறையிலோ அல்லது அஹிம்சை முறையிலோ எப்படி ஒழிப்பது என்று அவர்கள் ஆராய வேண்டும். ஹிம்சைமுறை நமக்குத்தெரியுமென்று நினைக்கிறேன். ஓரிடத்திலும் அது வெற்றி பெற்றதில்லை.

அஹிம்சை வழி இன்னும் திட்டமாக உருவடையவில்லை; சோதனை நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதைச் சாதித்துவிட்டோம் என்று காட்டிக்கொள்வதற்குச் சிறப்பாக எதுவும் இல்லை. எனினும், சமத்துவம் ஏற்படும் வகையில், அஹிம்சைமுறை வேலை செய்யத் தொடங்கியிருக்கிறதென்பது நிச்சயம்; வேலை ஒரு வேளை மந்தமாக இருக்கலாம். அஹிம்சை என்ற அடிப்படையில் ஒரு சமூகமோ அல்லது சமுதாயமோ நிருமாணிக்கப்பட்டிருக்குமானால், அஹிம்சையைப் பின் பற்றுபவர்களேனும் மற்றவர்களேனும் அந்த அடிப்படை பற்றிக் குறைகூறினாலும் எதிர்த்தாலும், அதனால் சலியாது நிற்கும் ஆற்றல் அந்தச்சமூகத்துக்கும் சமுதாயத்துக்கும் இருக்க வேண்டும்.

செல்வம் படைத்தவர்கள் நம் காங்கிரஸில் இருக்கிறார்கள். இவர்களே வழிகாட்ட வேண்டியவர்கள். தனிப்பட்ட காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும், பொருளாதார சமத்துவம் என்ற அம்சத்தில் தம் உள்ளம் உண்மையாகவே ஊன்றி இருக்கிறதா என்று ஆராய நமது போராட்டம் சிறந்த சந்தர்ப்பமளிக்கிறது. என்றைக்காவது சமத்துவம் நிச்சயமாக ஏற்படும் என்றால், அதற்குக் கால்கோள் இப்போதே செய்தாக வேண்டும். சிலர், சுயராஜ்யம் வந்த பிறகு முக்கியமான சீர்திருத்தங்கள் ஏற்படும் என்று எண்ணுகிறார்கள்; அஹிம்சை நிலவும் சுயராஜ்யம் சாதாரணமாய் எப்படி நடைபெறும் என்பதுபற்றி இவர்கள் ஒன்றுமே அறியவில்லை என்பதுதான் இதன் பொருள். திடீரென்று ஒருநாள் சுயராஜ்யம் வானத்தைப் பொத்துக்கொண்டு வரப்போவதில்லை. சுயராஜ்யம் என்ற மாளிகையை அனைவருடைய கூட்டு முயற்சியாலும் ஒவ்வொரு கல்லாக வைத்துத்தான் கட்டவேண்டும். நம் கட்டிடம்வெகுதூரம் எழும்பிவிட்டது; ஆயினும், இன்னும் எழுப்பவேண்டிய உயரம் அதிகம் இருக்கிறது; அவ்வளவையும் எழுப்பினால்தான் சுயராஜ்ய மாளிகையை அதன் பூரணப் பொலிவுடன் நாம் காணமுடியும்; எனவே, பொருளாதார சமத்துவம் ஏற்படுவதற்குத் தாம் செய்ததென்ன என்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

## 14. விவசாயிகள்

சுயராஜ்யம் மிகப்பெரிய கட்டிடம். எண்பது கோடி கைகள் சேர்ந்து அதைக் கட்டவேண்டும். விவசாயிகளுக்கே இதில் பெரும் பங்கு உண்டு. இவர்கள் நம்மில் 80 சத விகிதத்துக்குமேல் இருக்கிறார்கள்; காங்கிரஸ் என்றாலே விவசாயிகள் என்று ஆகவேண்டும். நிலைமை இப்படி இல்லை. தங்கள் அஹிம்சையின் வலிமை எவ்வளவு பெரிதென்பதை அவர்கள் உணரும்போது, உலகத்திலுள்ள எந்தச் சக்தியும் அவர்களை எதிர்த்து நிற்கமுடியாது.

ஆனால், அரசியலில் ஆதிக்கம் பெறுவதற்குக் கருவியாக விவசாயிகளை உபயோகிக்கக் கூடாது. உபயோகிப்பது அஹிம்சை முறைக்கே விரோதமாகும். விவசாயிகளைத் திரட்டி வேலைக்கு நான் எப்படி ஒருமுகப்படுத்துவேன் என்பதை அறிய விரும்புகிறவர்கள், சம்பரானில் நடந்த சத்தியாகிரக வரலாற்றைத்

தெரிந்து கொள்வது பயனுள்ளதாயிருக்கும். இந்தியாவில் முதன் முதல் அங்கேதான் சத்தியாக்கிரகத்தைச் செயலில் நடத்திச் சோதனை செய்தோம்; இதன் பலன் என்ன என்பதை நம்நாடு முழுமையும் அறியும். இது பொதுமக்கள் இயக்கமாக வளர்ந்தது. ஆதி முதல் அந்தம்வரையில் பூரண அஹிம்சையில் அமைந்தது; இருபது லட்சம் விவசாயிகள் அதில் கலந்து கொண்டார்கள். நூறு வருஷமாக இருந்த குறிப்பான ஒரு குறையைப் போக்குவதற்கென்றே அப்போராட்டம் தொடங்கினோம். அக்குறையைப் போக்க வேண்டுமென்று பலாத்காரமுறையில் பலதடவை முயற்சி நடந்தது. ஒவ்வொரு தடவையும் அதிகாரிகள் விவசாயிகளை நசுக்கிவிட்டார்கள். ஆனால் அஹிம்சை முறையோ, விவசாயிகளுக்கு, ஆறே மாதத்தில் வெற்றி தந்தது. சம்பரான் ஜில்லா விவசாயிகளுக்கு, நேர்முகமான எந்த முயற்சியுமில்லாமல், அரசியல் விழிப்பு ஏற்பட்டது. தங்கள் துயரத்தைப் போக்க அஹிம்சைதான் சிறந்த கருவி என்பதை அவர்கள் கண்கூடாகவே கண்டார்கள் ; இதனால்தான் அவர்கள் காங்கிரஸில் சேர்ந்தார்கள். பிரிஜ்கிஷோர் பிரசாதும், ராஜேந்திரபிரசாதும் சத்தியாகிரக இயக்கத்தில் தலைமை வகித்து அம்மக்களை நடத்தினார்கள். சமீபத்தில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கங்களிலெல்லாம் இந்த விவசாயிகள் நல்ல வேலை செய்திருக்கிறார்கள்.

கேடா, பர்தோலி, போர்சாத் ஆகிய ஜில்லாக்களில் விவசாயிகளின் இயக்கம் எப்படி நடை பெற்றதென்பதை வாசகர் அறிவதும் பயனுடையதாகும். விவசாயிகளுக்குச் சொந்தமான குறைகள் என்ன உண்டோ, என்ன கஷ்டங்களை இயல்பாக அவர்கள் உணர்கிறார்களோ, அவைகளுக்காக மட்டும் விவசாயி இயக்கத்தை நடத்தி, வேறு அரசியல் காரியங்களுக்கு அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்ததுதான் இந்த இயக்கங்கள் அடைந்த வெற்றியின் ரகசியமாகும். குறித்த ஒரு குறையைப் போக்கவேண்டி அனைவரும் ஒன்று சேர்வதென்றால் அவர்களுக்குப் புரியும். அஹிம்சை பற்றி அவர்களுக்கு அறிவுரைகள் பகரவேண்டியதில்லை. முதலாவதாக, அவர்கள் நன்றாய் உணரக்கூடிய விதத்தில் ஏதேனும் ஒரு பரிகாரம் தேடவேண்டி, அஹிம்சையைக் கடைப்பிடிக்க விவசாயிகள்

கற்றுக்கொள்ளட்டும். பின்னர், அவர்கள் கடைப்பிடித்த வழி அஹிம்சைவழி என்று எடுத்துக்காட்டினால், அவர்களுக்கு அது எளிதில் விளங்கும்.

விவசாயிகளுக்காக அவர்களிடையே வேலை எப்படி நடத்தவேண்டும் என்பது பற்றிக் காங்கிரஸ்காரர் யாரேனும் அறிய விரும்பினால், இந்த உதாரணங்களிலிருந்து நன்றாய் அறியலாம். காங்கிரஸ்காரர் சிலர் விவசாயிகளை ஒன்று சேர்ப்பதற்காக இப்போது பின்பற்றிவரும் முறையால் அவர்களுக்கு எந்த நன்மையும் விளையவில்லையென்றும் தீமைதான் விளைந்திருக்கிறதென்றும் எனக்குத் தோன்றுகிறது. எப்படி இருந்தாலும், அவர்கள் அஹிம்சை வழியில் ஒழுகவில்லை என்பது தெளிவு. ஆனால் இந்த ஊழியர்கள் சார்பாக ஒன்று சொல்ல வேண்டும். அஹிம்சை முறையில் தங்களுக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை என்று இவர்கள் தெளிவாக ஒப்புக்கொள்கிறார்கள். இவர்களுக்கு, காங்கிரஸின் பெயரை உபயோகிக்கக் கூடாதென்பதும் காங்கிரஸ்காரராகத் தாங்கள் வேலை செய்யக் கூடாதென்பதுமே நான் சொல்லக்கூடியது.

இந்தியாவனைத்துக்கும் ஏற்ற முறையில் விவசாயிகளையும் தொழிலாளரையும் கூட்டி ஒருமுகப்படுத்தும் முயற்சி எங்கும் இப்போது நடந்துவருகிறது; இந்த முயற்சியில் நான் ஏன் ஈடுபடவில்லை என்பது வாசகருக்கு இப்போது நன்கு விளங்கும். எல்லோரும் ஒரே நோக்கத்துக்காக உழைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! விசாலமான பரப்புள்ள நமது நாட்டில் ஒரு வேளை இது அசாத்தியமாகவும் இருக்கலாம். அஹிம்சையில் எந்த விதமான நிர்பந்தமுமில்லை. நல்ல விவேகத்தோடு அஹிம்சையைக் கடைப்பிடித்து உழைத்துவந்தால், செய்யும் வேலையே வர வேண்டிய தன்மையை நிச்சயம் வருவிக்கும்.

விவசாயிகளுக்குரிய வெவ்வேறு பிரச்னைகளைக்குறித்து வேலை செய்கிற தனி இலாகாவொன்று, தொழிலாளர் இலாகாபோல, காங்கிரஸில் இருக்கவேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

## 15. தொழிலாளர்

ஆமதாபாத் தொழிலாளர் சங்கமானது, இந்தியா முழுமையும் பார்த்துப் பின்பற்றத்தக்க மாதிரிச் சங்கமாகும், இச்சங்கத்துக்கு அடிப்படையில் அஹிம்சை தவிர வேறொன்றுமில்லை. இதன் வளர்ச்சியில் ஒரு தடையும் ஏற்பட்டதில்லை. எவ்வித ஆடம்பரமோ விளம்பரமோ இல்லாமல் இது மேலும் மேலும் வலிமைபெற்று வந்திருக்கிறது. இச்சங்கத்துக்கென்று தனியான ஆதுலர் சாலை (ஆஸ்பத்திரி) இருக்கிறது. மில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்காகப் பாடசாலைகளும் வயது வந்தோருக்கேற்ற கல்வி வகுப்புக்களும் உள்ளன. சொந்த அச்சுக்கூடமும் கதர் வஸ்திராலயமும் குடியிருக்கத் தனியான விடுதிகளும் உள்ளன. அனேகமாக இங்குள்ள தொழிலாளர்கள் அனைவருக்குமே வாக்குரிமை உண்டு. இவர்களைப் பொறுத்ததே தேர்தல்களின் முடிவு. மாகாணக் காங்கிரஸ் கமிட்டியாரின் முயற்சியால் இவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டது. காங்கிரஸ் ஸ்தாபனத்திலுள்ள கட்சிப்பூசல்களில் இச் சங்கம் ஒரு போதும் கலந்துகொண்டதில்லை. ஆமதாபாத் நகரசபையின் வேலைகளைக் கூட இது நிர்ணயிக்க முடிகிறது. பலமுறை வேலைநிறுத்தம் செய்து வெற்றி கண்டிருக்கிறது. வேலை நிறுத்தங்கள் யாவும் பூரண அஹிம்ஸையில் நடந்தன. மில் முதலாளிகளும் தொழிலாளரும் தாங்களே மத்தியஸ்தர்களை ஏற்படுத்திக் கொண்டு பெரும்பாலும் அவர்கள் மூலமாகவே தங்கள் தகராறுகளைத் தீர்த்துக்கொண்டிருக்கிறார்கள். என்னிஷ்டம் போல் செய்வதானால், இந்நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தையுமே ஆமதாபாத் சங்கத்தைப் போல் ஒழுங்குபடுத்தி அமைத்துவிடுவேன். இந்தச்சங்கம் அகில இந்தியத் தொழிலாளர் சங்கத்தின் விவகாரங்களில் ஒருபோதும் தலையிட முயன்ற தேயில்லை; அகில இந்தியச் சங்கத்தின் போக்கும் இச்சங்கத்தை ஒருபோதும் பாதித்ததில்லை. அகில இந்தியச் சங்கமானது அகமதாபாத் சங்கத்தின் முறையை ஏற்றுக்கொண்டு, அகில இந்தியச்சங்கத்தின் அங்கமாக இதையும் ஏற்றுக்கொள்ளக் கூடிய காலம் வருமென்றே நான் நம்புகிறேன். இதற்கு அவசரமில்லை. உரியகாலத்தில் இது நடைபெறும்.

## 16. ஆதிக்குடிகள்

ஆதிவாசி( ஆதிக்குடிகள்) என்ற சொல்லானது, மலைகளில் வசிக்கிற இந்நாட்டின் பூர்வகுடிகளான பீல், கோண்டு, நீலகிரியிலுள்ள தோடர் முதலான மக்களைக் குறிக்க உபயோகிக்கும் சொல்லாகும். இச்சொல்லைச் செய்தவர் தக்கர் பாபா என்று எண்ணுகிறேன்.

ஆதிக்குடிகளுக்குச் சேவை செய்தல் நிர்மாணத் திட்டத்தில் ஓர் அங்கமாகும். பதினாறாவது அங்கமாக இந்த வேலையை இங்குக் குறித்திருக்கிறேன்; இதனால் இது முக்கியமானதன்று என்று பொருள்படாது. நம் நாடு எவ்வளவோ விசாலமானது; இங்குள்ள மக்கள் வெவ்வேறான இனத்தவர்கள். எனவே, மக்களனைவரையும் அவர்கள் நிலைமையையும் பற்றிய எல்லாச் செய்திகளையும் நம்முள் எவரும் அறிந்ததாகச் சொல்லமுடியாது; எவ்வளவு சிறந்த மனிதராலும் அறிந்திருக்கமுடியாது. நாம் ஒரே மக்கட் சமுதாயம் என்று சொல்லிக் கொள்ளுகிறோமே, இந்தச் சொல்லை நிலை நாட்டுவது எவ்வளவோ கஷ்டமானது; சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியும் மற்ற ஒவ்வொரு தொகுதியோடும் தான் ஒன்றியிருப்பதாக உண்மையுணர்வு பெற்றால்தான் இது சாத்தியம்; நம் மக்களைப்பற்றிய மேற்கூறிய செய்திகளை ஒருவர் தாமே உணரும் போதுதான், இந்தக் கூற்றையும் அவர் நன்றாக உணரமுடியும்.

இந்தியா முழுமையும் ஆதிக்குடிகள் இரண்டு கோடிக்கு மேல் இருக்கிறார்கள். கூர்ஜரத்தில் பலவருஷங்களுக்கு முன்னே பீல் ஜாதியினராகிய ஆதிக்குடிகளிடையே தக்கர் பாபா வேலைசெய்ய ஆரம்பித்தார். தாணா ஜில்லாவில் அவசியமாய்ச் செய்ய வேண்டிய இதே வேலையில் பாலகங்காதர கேர் ( பம்பாய் பிரதமர் ) 1940 ஆம் வருஷத்தில் அவருக்கு இயல்பாயுள்ள முழு ஆர்வத்தோடு ஈடுபட்டார். இன்று ஆதிவாசி சேவா மண்டலத்துக்கு அவரே தலைவராக இருக்கிறார்.

இந்தியாவின் மற்றப்பகுதிகளிலும் அவரைப் போலவே வேறு பலர் சேவைசெய்கிறார்கள். எனவே, சேவை செய்வோர் தொகை மிகவும் குறைவு. உண்மையாக இத்துறையில் மிகுந்த வேலைக்கு இடமிருக்கிறது. ஊழியர்களே குறைவு. இதுவெறும் ஜீவ காருண்யத்தால் மட்டும் விளைந்த தொண்டன்று,

உருப்படியான தேச சேவை என்பதையும், இச் சேவை உண்மையான சுதந்திரம்பெறும் நாள் நெருங்கி வரும்படி செய்கிற தென்பதையும் யாரே மறுக்க முடியும்?

## 17. குஷ்டரோக நிவாரணம்

குஷ்டரோகி என்கிற மாத்திரத்திலே அருவருப்புக்கு இடமாயிருக்கிறது. மத்திய ஆப்பிரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் தான் குஷ்டரோகிகள் அதிகம். எனினும் நம்முள் சிறந்தோர்களைப் போலவே இவர்களும் சமூகத்தில் ஒரங்கம் ஆவார்கள். ஆனால் சிறந்த மக்களுக்கு மற்றோருடைய கவனிப்புத் தேவையில்லாத போதுங்கூட, அவர்களையே நாம் அதிகம் கவனிக்கிறோம். மற்றப்படி உண்மையில் நாம் தனியாகக் கவனிக்கவேண்டியவர்களான குஷ்டரோகிகளைக் கவனிக்காதது மட்டுமல்ல, வேண்டுமென்றே உதாசீனம் செய்கிறோம். இது இரக்கமற்ற செயலென்றே சொல்லத் தோன்றுகிறது; அஹிம்சையை யொட்டிப் பார்த்தால், இது இரக்கமற்ற செயல்தான். அன்னிய நாட்டிலிருந்து இங்குவந்துள்ள கிறிஸ்தவமதப் பாதிரிதான் நம் நாட்டில் குஷ்டரோகியைக் கவனிப்பவர் என்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். இந்தியரால் குஷ்டரோகிகளுக்காக நடத்தப்பெறும் வைத்தியசாலை ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது; இது வர்தாவுக்கருகிலுள்ளது; மனோஹர் திவான் என்பவர் உண்மையான அன்புப்பணியாக இதை நடத்தி வருகிறார். இதற்கு வினோபாபாவே வேண்டிய ஊக்கமளித்து வழிகாட்டி வருகிறார். .இந்தியாவின் ஒவ்வோர் அங்கத்திலும் புத்துயிர் எழுந்து பொங்குமானால், சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடித்து மிக்க விரைவில் சுதந்திரமடைய வேண்டும் என்ற உணர்ச்சி நம்மிடம் உண்மையாகவே இருக்குமானால், இந்தியாவில் ஒரு குஷ்டரோகியேனும் பிச்சைக்காரரேனும் பராமரிப்பில்லாமலோ எண்ணுவாரற்றோ இருக்க முடியாது. நிர்மாண சேவை என்பது ஒரு சங்கிலி போன்றது. இச்சங்கிலியில் எத்தனையோ கரணைகள் உள்ளன. நிர்மாணத் திட்டம் என்ற நூலைத் திருத்தி இப்போது மீண்டும் வெளியிடுகையில், குஷ்டரோக நிவாரண வேலையை இங்கு வேண்டுமென்றே இச்சங்கிலியில் ஒரு புதிய கரணையாகச்

சேர்த்திருக்கிறேன். இந்தியாவில் குஷ்டரோகிகளுக்கு என்ன ஸ்தானம் கொடுத்திருக்கிறோமோ அதே ஸ்தானம்தான் நம் நாட்டவருக்கு இன்றைய நாகரிக உலகத்தில் கொடுத்திருக்கிறார்கள்; உலக விவகாரங்களைச் சற்றுக் கவனித்தால் இதை நாம் உணரலாம். கடல் கடந்த இந்தியர்களின் நிலைமையை ஆராய்ந்தால் போதும்; நான் கூறியது எவ்வளவு உண்மையென்பது தானே விளங்கும்.

## 18 மாணவர்

மாணவர்களைப் பற்றிய சேவையைக் கடைசியில் சொல்லலாமென்று வைத்திருக்கிறேன். அவர்களோடு எப்போதும் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. என்னை அவர்களுக்குத் தெரியும்; அவர்களையும் எனக்குத் தெரியும். எனக்காக எத்தனையோ மாணவர்கள் சேவையில் இறங்கியிருக்கிறார்கள். கல்லூரிகளில் படிப்பை துறந்தோர் பலர் என் மதிப்புக்குரிய தோழர்கள். இவர்களால் வருங்காலத்தில் பெரு நன்மை விளையுமென்ற நம்பிக்கையுண்டு. ஒத்துழையாமை ஓங்கியிருந்த காலத்தில் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் துறக்கும்படி இவர்களை அழைத்திருக்கிறோம். காங்கிரஸ் அழைப்புக்கிணங்கி இப்படித் துறந்துவந்த ஆசிரியர் மாணவர்களில் சிலர், தாங்கள் ஏற்ற கொள்கையில் மிக்க உறுதியோடிருந்து நாட்டுக்கும் தங்களுக்குமே மிக்க நன்மை உண்டாக்கியிருக்கிறார்கள். இவ்விதம் துறக்கும்படி மீண்டுமொருமுறை மாணவர்களை நான் அழைக்கவில்லை; அதற்கேற்ற சூழ்நிலை ஏற்படாததே அதற்கு காரணம். இன்றைய கல்விமுறை போலியானது, இயற்கைக்கு முரணானது; எனினும், அக்கல்வி முறையின் மீது நம் நாட்டு இளைஞர்களுக்கு அளவற்ற மோகமிருக்கிறதென்று அனுபவத்தில் தெரியவந்திருக்கிறது. கல்லூரிப்படிப்பு, ஏதேனும் ஒரு வேலைக்கு வழிகாட்டுகிறது. சுகபோகம் நிறைந்த நாகரிக சமூகம் என்று கருதுகிற ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதிச் சீட்டுப்போன்றது இந்தப்படிப்பு. நல்ல விஷய அறிவுபெறவேண்டும் என்ற தேட்டம் குற்றமானதென்று சொல்லமுடியாது. ஆனால், கல்லூரிப் படிப்பு என்ற வழக்கமான தடத்தில் போவதைத் தவிர, இந்தத் தேட்டம் நிறைவேற இன்று வேறு வழியும் இல்லை. இந்த

படிப்பில் தாய்மொழிக்குரிய ஸ்தானத்தை முற்றிலும் அன்னியமான ஒரு மொழி கவர்ந்து கொள்ளுகிறது; இந்த அன்னிய மொழியைக் கற்கும்பொருட்டு இவர்கள் பள்ளிக்கூடத்தில் பல வருஷகாலம் பாழாக்க வேண்டியிருக்கிறது. இப்படிக் காலம் பாழ்போவதை இவர்கள் பொருட்படுத்துவதில்லை. தாய் மொழியை அன்னியமொழி வெருட்டிவிடுவது எத்தகைய பாவமென்பதை ஒருபோதும் உணருவதில்லை. இக்காலத்து நுட்பமான சிந்தனைகளையும் விஞ்ஞானச் செய்திகளையும் தெரிந்துகொள்வதற்கு நம் நாட்டில் வழங்கும் பல்வேறு மொழிகள் பயன்படாவென்று இந்த மாணவர்களும் அவர்கள் ஆசிரியர்களும் முடிவுசெய்துவிட்டார்கள். ஜப்பான் தேசத்தில் படிப்பெல்லாம் ஜப்பானிய மொழியிலேயே சொல்லித் தருகிறார்களென்று தெரியவருகிறது. அப்படியானால் அவர்கள் நாட்டில் அறிவு எப்படி வளர்ந்தது என்று அறிந்தாலும் நலம். சீனப் பெருந்தலைவரான சியாங்-கே-ஷேக்குக்குத் தெரிந்த ஆங்கிலமெல்லாம் மிக மிகச் சொற்பந்தான்.

ஆயினும், மாணவர்கள் இந்த நிலையில் இருந்த போதிலுங்கூட, வருங்காலத்தில் இந்நாட்டுத்தலைவர்களாய் வரப்போகிறவர்கள் அனைவரும் இந்த இளம்பிள்ளைகளிடை யிருந்தும் இளம்பெண்களிடையிருந்துமே உதிக்க வேண்டியவர்கள்; ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இந்த நாட்டில் எத்தனை விதமான அபிப்பிராய பேதங்கள் உண்டோ அத்தனையும் இவ்விளைஞர் களைப் பாதிக்கின்றன. அஹிம்சை நெறி அவர்களை அதிகமாக வசீகரிக்கவில்லை. அடிக்கு அடி திருப்பிக்கொடுப்பது என்றாலும், ஓரடிக்கு பதில் இரண்டடி திருப்பிக்கொடுப்பது என்றாலும், அவர்களுக்குச் சுலபமாய் விளங்குகிறது. அடி கொடுப்பதால் ஏற்படும் பலன் கொஞ்ச நேரமே இருப்பதானாலுங்கூட அப்பலன் உடனே கிடைப்பதாகத் தென்படுகிறது. மிருகங்கள் தமக்குள் சண்டை போடும் போதும், மக்கள் இவ்வாறு யுத்தம் செய்யும் போதும், மிருகபலம் தான் ஒன்றோடொன்று மோதுகிறதென்று நாம் காண்கிறோம்; மேற்சொன்ன போர் முறையும் இவ்விதம் மிருக பலத்தைப் பரீட்சிக்கும் சோதனைதான். இதற்கு முடிவில்லை. ஆனால் அஹிம்சைத் தத்துவத்தில் ஈடுபடுவதென்றால், பொறுமையாக ஆராய வேண்டும். அதைவிடப் பொறுமையாகவும்

அதகச் சிரமத்தோடும் அஹிம்சையைப் பின்பற்றி நடக்கவேண்டும். மாணவர்களிடையே செல்வாக்குப் பெறுவதற்காகப் பலர் இன்று போட்டி போடுகிறார்கள். இந்தப் போட்டியில் நான் சேரவில்லை. விவசாயிகள் விஷயத்திலும் தொழிலாளிகள் விஷயத்திலும் நான் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு என்ன காரணமுண்டோ அதே காரணந்தான் இங்கும் உண்டு. இருந்தாலும் மாணவன் என்ற சொல்லுக்கு விரிவாகப் பொருள் செய்து கொண்டால், நானும் அவர்களோடு உடன் பயிலும் மாணவனே. நான் பயிலும் கலாசாலை, அவர்கள் கலாசாலையினின்றும் வேறானது. எனது கலாசாலைக்கு வந்து நான் தேடுவதையே அவர்களும் உடன் தேடலாமென்று எப்போதுமே அ்வர்களை நான் அழைக்கிறேன். இதற்கு நான் கூறும் நிபந்தனைகள் பின்வருவனவாகும்.

1. கட்சி அரசியலில் மாணவர் கலந்துகொள்ளக் கூடாது. அவர்கள், அரசியல் வாதிகள் அல்ல, மாணவர்கள்; உண்மையை நாடுபவர்கள் என்பது ஞாபகமிருக்க வேண்டும்.

2. அரசியல் பற்றி மாணவர் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. வீரவழிபாடு அவர்களுக்கு இருக்கத்தான் வேண்டும். ஆனால் அவர்கள், தங்கள் வீரவழிபாட்டை அவ்வீரர்களிடமுள்ள சிறந்த பண்புகளைப் பின்பற்றி நடப்பதன் மூலம் வெளிப்படுத்த வேண்டுமே யொழிய, அவ்வீரர்கள் சிறைப்பட்டார்களென்றோ, இறந்துவிட்டார்களென்றோ, தூக்கிலிடப்பட்டார்களென்றோ, வேலை நிறுத்தம் செய்வதன் மூலம் காட்டலாகாது. அவர்களுடைய துயரம் பொறுக்க முடியாததாயிருந்தாலும், எல்லா மாணவர்களிடமும் ஒரே விதமான உணர்ச்சி ஏற்பட்டாலும், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கலாசாலைத் தலைமை அதிகாரியின் அனுமதியின்மேல் கலாசாலைகளை மூடிவிடலாம். தலைமை அதிகாரிகள் இதற்குச் சம்மதிக்காவிட்டால் மாணவர்கள் ஒழுங்கான முறையில் அக் கலாசாலைகளை விட்டுவிலக வேண்டும். மீண்டும் கலாசாலை நிர்வாகிகள் தங்கள் செயலுக்காக வருந்தி மாணவர்களைத் திருப்பி அழைத்தால் அவர்கள் போய்ச் சேரலாம். எக்காரணம் பற்றியும் அவர்கள், தங்களோடு சேராமல் கலாசாலைக்குப் போகிறவர்கள் விஷயத்திலோ அதிகாரிகள் விஷயத்திலோ எந்தவிதமான நிர்ப்பந்தமும் செய்யக் கூடாது. தாங்கள் ஒற்றுமையாகவும்

கண்ணியமாகவும் நடந்து கொண்டால் நிச்சயம் வெற்றிகிட்டும் என்ற உறுதி அவர்களுக்கிருக்க வேண்டும்.

3. மாணவர்களெல்லோரும் சாஸ்திரோக்தமான முறையில் நூல் வேள்வி செய்யவேண்டும். அவர்கள் உபயோகிக்கும் கருவிகளை எப்போதும் சுத்தமாகவும் துப்புரவாயும் ஒழுங்காகவும் நல்ல நிலைமையிலும் வைத்திருக்க வேண்டும். முடியுமானால், இந்தக் கருவிகளைத் தாங்களே செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் நூற்கும் நூல் தானாகவே மிக உயர்ந்த ரகமாயிருக்கும். நூல் நூற்பது சம்பந்தமான புத்தகங்களை யெல்லாம் படித்து, செல்வநிலை, சமூகம், நல்லொழுக்கம், அரசியல் ஆகியவை பற்றிய தத்துவங்கள் நூற்றலில் என்ன அடங்கியுள்ளன என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

4. எப்போதும் அவர்கள் கதரே உடுத்தவேண்டும். அன்னிய நாட்டுப் பொருள்களையோ யந்திரத்தால் செய்த பொருள்களையோ உபயோகிப்பதை அடியோடு நிறுத்தி, கிராமத்தில் செய்த பொருள்களையே உபயோகிக்க வேண்டும்.

5. வந்தேமாதரம் பாடும்படியோ தேசீயக் கொடியை வணங்கும்படியோ மற்றவர்களை நிர்பந்தப்படுத்தக் கூடாது. தேசீயக் கொடி போட்ட பொத்தான்களை அவர்கள் தாங்களே அணிந்துகொள்ளலாம்; மற்றவர்களை அணியும்படி கட்டாயப்படுத்தக் கூடாது.

6. அவர்கள் மூவர்ணக் கொடியின் தத்துவத்தைத் தங்கள் சொந்த வாழ்க்கையில் கடைப்பிடித்துச் சாதி வேற்றுமையோ தீண்டாமையுணர்ச்சியோ தங்கள் இதயத்தில் ஒரு சிறிதும் இல்லாதபடி அகற்ற வேண்டும். மற்ற மதங்களைச் சேர்ந்த மாணவர்களையும் ஹரிஜனங்களையும் தங்களுடைய சொந்த உற்றார் உறவினர்போல் எண்ணி, அவர்களுடன் நட்புபூண்டு ஒழுக வேண்டும்.

7. அயலில் வாழ்பவர்களுக்கு ஏதேனும் நோயோ காயமோ ஏற்பட்டவிடத்து அவர்கள் வேண்டிய முதலுதவி செய்ய வேண்டும். பக்கத்துக் கிராமங்களில் சென்று குப்பை வாரித் துப்புரவு வேலை செய்து, கிராமத்துச் சிறு பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் சுத்தமாயிருக்க கற்பிக்க வேண்டும்.

8. தேசியமொழியாகிய ஹிந்துஸ்தானி மொழி பேச்சிலும்

எழுத்திலும் இப்போது இரண்டு உருவமுடையதாயிருக்கிறது. இரண்டையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஹிந்தி பேசினாலும் உருது பேசினாலும் அவர்கள் எளிதாய் அறிந்துகொள்ள முடியும். நாகரி எழுத்தோ உருது எழுத்தோ எழுதினாலும் படிக்கவும் முடியும்.

9. தாங்கள் கற்பதில் புதிதாயுள்ளதெல்லாவற்றையும் அவர்கள் தங்கள் தாய்மொழியில் பெயர்த்தெழுதவேண்டும். அயலூர்களுக்கு வாரந்தோறும் போகும்போதெல்லாம் இப்படிக் கற்ற அறிவை அங்குப் பரப்பவேண்டும்.

10. ரகசியமாக அவர்கள் ஒன்றும் செய்யலாகாது. எல்லா விவரங்களிலும் சிறிது சந்தேகத்துக்கும் இடங்கொடுத்தலாகாது. புலன்களைக் கட்டுப்படுத்தித் தூய வாழ்க்கை வாழ வேண்டும். அச்சத்தை அடியோடு அகற்ற வேண்டும். தங்களோடு படிக்கும் மாணவர் யாரேனும் பலவீனராயிருந்தால் அவரைப் பாதுகாக்க எப்போதும் சித்தமாயிருக்க வேண்டும். கலகங்கள் ஏற்பட்டால் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் கலகங்களை அடக்க அவர்கள் சித்தமாக வேண்டும். நமது போராட்டத்தின் முடிவான கட்டம் வருங்காலத்தில் தங்களுக்குப்பின் நடக்க வேண்டியவற்றைச் சொல்லிவைத்துவிட்டு, நாட்டின் சுதந்திரத்துக்காகத் தங்களைப் பலிகொடுப்பது அவசியமானால், அதற்கும் அவர்கள் சித்தமாயிருக்க வேண்டும்.

11. தங்களுடன் படிக்கும் பெண்களோடு பழகுவதில் முறை தவறாமலும் பெருந்தன்மையாகவும் நடந்து கொள்வதில் மிக்க கவனத்தோடிருக்க வேண்டும்.

மாணவர்களுக்காக இவ்விதம் நான் வகுத்துக் கொடுக்கிற திட்டத்தை நிறைவேற்ற அவர்களுக்குப் போதிய நேரம் வேண்டும். சோம்பல்தனமாகவே அவர்கள் நேரத்தை வீண்போக்குகிறார்கள் என்பதை நான் அறிவேன். சிக்கனமாக வேலை செய்துவந்தால் பலமணிநேரம் மிஞ்சும். இருந்தாலும், எந்த மாணவரும் அனாவசியமாக அவசரப்பட்டுத் தம் வேலைகளை முடித்துக் கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆகவே, தேசபக்தியுள்ள மாணவரெல்லோரும் இதற்காக ஒரு வருஷம் செலவு செய்யவேண்டுமென்று கூறுகிறேன்; தொடர்ந்தாற்போல் இந்த ஒரு வருஷம் செலவு செய்ய வேண்டியதில்லை. தாங்கள்

கல்வி பயிலும் காலம் முழுவதிலும் சிறிது சிறிதாக வேலை செய்வதன் மூலம் மொத்தக் கால அளவு ஒரு வருஷம் இருந்தால் போதும். இவ்விதம் செலவு செய்கிற ஒரு வருஷகாலம், காலவிரயமல்ல என்பதை அவர்கள் உணர்வார்கள். இந்தச் சேவையானது அவர்களுடைய உடல்திறமை, உள்ளத்திறமை, நல்லொழுக்கம் ஆகியவற்றை வளர்க்கும். தவிர, சுதந்திர இயக்கத்துக்கு அவர்கள் கல்வி பயின்ற காலத்தில் அவர்களால் திட்டமான சேவையும் விளைந்திருக்கும்.

## நிர்மாணத் திட்டத்தில் சட்ட மறுப்புக்குள்ள ஸ்தானம்

நிர்மாணத்திட்டத்தில் மக்கள் அனைவருடைய ஒத்துழைப்பும் கிடைக்குமானால், பூரண அஹிம்சையின் மூலம் சுதந்திரம் அடைவதற்குச் சட்டமறுப்பு இன்றியமையாததல்ல என்று இப்புத்தகத்தில் நான் கூறிவந்திருக்கிறேன். ஆனால், அப்படிப்பட்ட சௌகரியமான ஒத்துழைப்பு மக்கட் சமுதாயத்திலும் தனிப்பட்டவர்களிடையிலும் அமைவது அபூர்வந்தான். ஆகவே, நாடெங்கும் அஹிம்சையை மேற்கொண்டு போராடுவதானால், அதில் சட்டமறுப்பின் ஸ்தானம் என்ன என்பதை உணர்வது அவசியமாகும். சட்டமறுப்பு மூன்று விதத்தில் உபயோகப்படும்:

(1) குறித்த ஓரிடத்தில் ஏற்பட்டுள்ள அநீதியைப் போக்குவதற்குச் சட்டமறுப்பைக் கடைப்பிடித்து வெற்றி பெறலாம்.

(2) குறித்த ஓர் அநீதி அல்லது தீமையைப் போக்குவதே நோக்கமாக இருந்தபோதிலுங்கூட, குறித்த இடத்திலுள்ள மக்களின் உணர்ச்சியையோ மனச்சாட்சியையோ தூண்டிவிடும் பொருட்டு தன்னையே பலியிட்டுக் கொள்ளும் முகத்தால் பயனைக் கருதாமலே சட்டமறுப்புச் செய்யலாம். சம்பரானில் நடந்த சட்ட மறுப்பு இப்படிப்பட்டது. அங்கு பலன் கிடைக்கிறதா என்பதைச் சிறிதும் கருதாமல், அங்குள்ள மக்கள் கூட என் விஷயத்தில் அனுதாபமற்றவர்களாக இருப்பார்களென்று தெரிந்தே நான் சட்ட மறுப்புச் செய்தேன். ஆனால், அது வெற்றிகரமாய் முடிந்தது. இவ் வெற்றியை, அவரவர் அபிப்பிராயம்போல், கடவுள் செயலென்றோ அதிர்ஷ்டமென்றோ சொல்லலாம்.

(3) நிர்மாண வேலையில் நல்லபலன் கிடைக்காவிட்டால்.

1941-ம் வருடத்தில் சட்டமறுப்புத் தொடங்கியது போலவே அச்சந்தர்ப்பத்திலும் தொடங்கலாம். அவ்வருஷத்தில் தொடங்கிய சட்ட மறுப்பானது சுதந்திரப் போராட்டத்தில் ஒரங்கமாயிருந்தபோதிலுங்கூட, அது பேச்சுச் சுதந்திரம் என்ற குறித்த ஒரு கொள்கைக்காகச் செய்ததாகும். பொதுவான ஒரு லக்ஷ்யத்துக்காகச் சட்டமறுப்புச் செய்யமுடியாது. உதாரணமாக சுதந்திரம் வேண்டும் என்பதற்காகச் சட்ட மறுப்புச் செய்யமுடியாது. நமது நோக்கம் திட்டமாயிருக்க வேண்டும்; எல்லோருக்கும் நன்றாய்ப் புரியக் கூடியதாயிருக்க வேண்டும்; நமக்கு விட்டுக் கொடுப்பதற்கான அதிகாரம் எதிரியிடமிருக்க வேண்டும். ஒழுங்கான முறையில் சட்ட மறுப்பை நடத்தினால் நிச்சயம் நம் நோக்கம் கைகூடும்படி செய்யும்.

சட்டமறுப்பு எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் பயன்படும். என்னென்ன சாதிக்கும் என்பவற்றை நான் இங்கு ஆராய வில்லை. ஆயினும், இங்குச் சுருக்கமாய்க் குறிப்பிட்டவற்றால் நிர்மாணத் திட்டத்துக்கும் சட்டமறுப்புக்குமுள்ள தொடர்பை வாசகர் உணர்ந்து கொள்ளலாம். முதலிரண்டு அம்சங்களான வகுப்புவேற்றுமை, தீண்டாமை என்பவை பற்றி, விரிவான நிர்மாணத் திட்டமெதுவும் அவசியமில்லை, அவசியமாயி ருக்கவும் முடியாது. ஆனால் சுதந்திரம் பெறுவதற்காகச் சட்டமறுப்பையே கைக்கொள்ளும் போது முன்னதாகவே இதற்கான ஆயத்தங்கள் செய்வது அவசியம்.மேலும், சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அவர்களின் முயற்சியும் அதற்குத் துணை செய்ய வேண்டும்; இம்முயற்சியை அவர்கள் எல்லோருக்கும் விளங்கும்படியாகவும் இன்னது செய்கிறோமென்ற நினைப்போடும் மேற் கொள்ள வேண்டும். ஆகவே, சட்டமறுப்பானது போராடுவோருக்கு ஒருபுறம் ஊக்கமளிக்கிறது; மறுபுறம் எதிரியையும் திகைக்கச் செய்கிறது. சுதந்திரம் பெறும் பொருட்டுச் சட்டமறுப்புச் செய்யத் துணிந்தால், அதில் கோடிக்கணக்கான மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்; அவர்கள் நிர்மாண வேலையை மேற்கொள்வதுதான் இந்த ஒத்துழைப்பு. இது இல்லாமல் சட்டமறுப்புச் செய்வதென்பது வீண் ஜம்பந்தான், அறவே பயனற்றது என்பதை வாசகர் உணரவேண்டும்.

## முடிவுரை

இச்சிறு நூல் காங்கிரஸ் சார்பிலோ, அதன் மத்திய காரியாலயத்துக்காகவோ எழுதிய கட்டுரையல்ல. சேவா கிராமத்தில் என்னுடன் உழைத்து வரும் ஊழியர் சிலரோடு நான் பேசியதன் பயனாகவே இது தோன்றிற்று. நிர்மாணத்திட்டத்துக்கும் சட்டமறுப்புக்கும்உள்ள தொடர்பை விளக்கி, அத்திட்டத்தை எப்படி நடத்துவது என்பதற்கு வழிகாட்டி நான் ஏதாவது எழுதினால் நலமென்று அவர்கள் கருதினார்கள். அதற்காகவே இதை எழுதினேன். நிர்மாணத் திட்டத்தின் அம்சங்கள் எல்லாம் இதில் கூறியவற்றோடு முடிந்து போகவில்லை. ஆயினும், இந்தத் திட்டத்தை மேற்கொண்டு எப்படி நடத்துவது என்பதற்குப் போதிய அளவு வழி காட்ட இது உதவும்.

இதில் கூறிய அம்சங்களைப் பார்த்து, சுதந்திர இயக்கத்தில் இவைகளும் ஒருபகுதியா என்றெண்ணி யாரும் பழிக்கலாகாது; பழிப்பதும் தவறு. பலர் பல காரியங் களைச் செய்கிறார்கள்; பெரிய காரியங்களுமுள்ளன, சிறிய காரியங்களுமுள்ளன. ஆனால், இவற்றுக்கும் அஹிம்சை அல்லது சுதந்திரத்துக்கும் என்ன சம்பந்தமென்று பார்ப்ப தில்லை. அப்படியானால், இவர்கள் எதிர்பார்ப்பது போலவே அக்காரியங்களால் கொஞ்சப் பலன்தான் விளையும். ஒருவர் ஜில்லா அதிகாரியாக வரலாம்; அவரைப் பிரமாதமானவரென்று யாரும் கருதாமல் போகலாம்; ஆனால் அவரே பெரிய சேனாதிபதியாக வந்துவிட்டால் மிகவும் பெரியவராகி விடுகிறார்; லக்ஷக்கணக்கான மக்களின் உயிர் அவர் கையிலிருக்கிறது. சர்க்காவும் இவரைப்போன்றதுதான். பட்டிக்காட்டு ஏழைக்கிழவி வைத்திருக்கும் ராட்டையால் அவளுக்கு ஒரணா கிடைப்பது தான் விளைகிற பலனாயிருக்கும். ஆனால், அதே ராட்டை ஜவஹர்லால் நேருவின் கையில் அமர்ந்த மாத்திரத்தில் இந்திய சுதந்திரத்துக்கே அது கருவியாய்விடுகிறது. ராட்டைக்கு நாமளிக்கும் ஸ்தானம்தான் அதற்குப் பெருமதிப்பைத் தருகிறது. நிர்மாணத் திட்டத்துக்கு நாமளித்துள்ள ஸ்தானமே, யாரும் பணியத்தக்க கௌரவமும் எதையும் பணியவைக்கும் சக்தியும் அதற்குத் தருகிறது.

நிர்மாணத்திட்டத்தை மற்றவர்கள் வேறு விதமாய்க் கூறலாம்; ஆனால், எனது அபிப்பிராயம் இதுவரை கூறியதேயாகும்.

ஒரு பித்தன் சொன்னது என்று இது தோன்றலாம். இது காங்கிரஸ்காரர் மனத்தைக் கவராவிட்டால், அவர்கள் என்னைத் தள்ளிவிட வேண்டியதுதான். நிர்மாணத்திட்டம் இல்லாமல் சட்டமறுப்பை நான் மேற்கொண்டு நடத்துவதென்பது, பாரிசவாயு வந்து விறைத்துப்போன கையால் ஒரு கரண்டியை எடுக்க முயல்வது போலாகும். ( கரண்டி எடுப்பது பெரிய காரியமல்ல; உடம்பிலுள்ள நோயாகிய பாரிசவாயுவை நீக்குவதுதான் உடனே செய்யவேண்டிய காரியம்) நோயில்லாத உடம்பு வேண்டிய காரியத்தைத் தானே செய்துகொள்ளும். அதுபோல செம்மையாய் அமைந்த இந்திய சமுதாயம் சுயராஜ்யத்தை எளிதில் தேடிக்கொள்ளும். அதைச் செம்மையாய் அமைப்பதுதான் முதல் வேலை; அதுவே நிர்மாணத்திட்டம்.

புனே, 13-11-1945

# அனுபந்தம்

## 19. பசுபாலனம்

( அல்லது கோ-சேவை)

கோ-சேவை என்ற சொல், சிந்தனை செய்து தேர்ந்தெடுக்கப்பட்டது. கோ ரக்ஷை என்பதில் அடங்கிய கருத்து நாம் பசுவைக் காப்பாற்றுகிறோம் என்பதாகும். இது வேண்டாமென்று கருதியே சேவை என்ற சொல்லை உபயோகிக்கிறோம். ஹிந்துவுக்குப் பசுவே தாய். உண்மையில் பசு அப்படித்தானிருக்கிறது. அமெரிக்கர் ஒருவர் பசுவை 'சுபிட்சை தரும் அன்னை' என்று வருணித்தார். அது பொருத்தமான வருணனை. மேலை நாட்டில் மாட்டின் இறைச்சியை உண்கிறார்கள் என்பது வாஸ்தவம். அங்கு மனிதனுக்கு நன்மையும் சுகமும் தரும் பிராணிகள் எல்லாவற்றிலும் பசுவே மிகவும் உயர்ந்ததென்று கருதுகிறார்கள். நம் நாட்டில் பசுவின் பால் இன்றி மனிதன் வாழமுடியும் என்று நாம் நம்புவது அருமை.

ஆடு மாடுகளைப் பாதுகாப்பது முக்கிய அம்சம். இந்திய நாட்டுக்கே இது உயிர்நாடி. பசுவை வணங்குகிற நாம் பசுவினத்தையும் அதன் சந்ததியையும் அலட்சியம் செய்வது மிகவும் பரிதாபகரமானது. பசுவை நாம் கொல்லமாட்டோம்.

ஆனால், அதைச் சித்திரவதை செய்வது வாஸ்தவம். இன்று ஆடு மாடுகள் மக்களுக்குப் பெரும் சுமையாகிவிட்டனவென்றும் அவற்றைக்கொன்றுவிட்டால் மனிதனுக்கு நல்லதென்றும் அனேகர் பேசுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள முக்கிய பிரச்சினைகளில் பசுபாலனம் ஒன்று. பேச்சினாலும், பணத்தினாலும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. பசுபாலன அறிவுடைய நிபுணர் பலர் இந்த வேலைக்குத் தங்களை அர்ப்பணம் செய்ய வேண்டும். பணம்படைத்தவர்கள் சேவையுணர்ச்சியோடு இதில் ஈடுபட வேண்டும். சுயலாபமும் சுரண்டலும் இதில் கூடாது. பிரச்சினை பெரிதென்று இதில் கவலைப்படவேண்டியதில்லை. அவரவர் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படாமல் தாம் செய்யக்கூடியதைப் பூர்த்தியாகச் செய்தால் இந்தப் பிரச்சினை தீர்வது உறுதி.

பசுபாலனத்தைச் செல்வ நிலையில் தேவையைமட்டும் ஆதாரமாக வைத்து நாம் முடிவு செய்வதாய் இருந்தால் பரிபாலனச் செலவுக்குக் காணாதபடி பால் கறக்கிற பசுக்களையும், பால் மறத்தவை, வயதானவை முதலியவற்றையும் சிறிதும் யோசிக்காமல் கொன்றுவிட நேரும். இந்த நிலை கருணையற்ற நிலை. இதற்கு இந்தியாவில் இடமில்லை. அப்படியானால் போதிய அளவு பால் கொடுக்க முடியாதவை, பரிபாலனச் செலவுக்குக் கட்டாதவை முதலான மாடுகளை என்ன செய்வது? இவைகளைக் கொல்லாமல் வைத்துக்காப்பது எப்படி? இக் கேள்விக்கு நான் கீழே விடை தருகிறேன்:-

1. பசுவுக்கும் அதன் சந்ததிகளுக்கும் மனிதன் (ஹிந்து) தான் செய்யவேண்டிய கடமையைச் செய்தல். செய்தால் நம்முடைய ஆடு மாடுகள் உலகத்துக்கே பெருமைகொள்ளத் தக்கனவாய் இருக்கும். இன்று நிலைமை இதற்கு மாறாய் இருக்கிறது.

2. பசுவளர்த்தல், பசு இனப்பெருக்கம் பற்றிய சாஸ்திர முறைகளைக் கற்றுக்கொள்ளுதல். இன்று இதுபற்றி அறியாமையே நிலவுகிறது.

3. காளைகளுக்கு இன்று காயடிக்க உபயோகிக்கிற குரூரமான முறையைக் கைவிட்டு மேலை நாட்டில் உபயோகத்திலுள்ள ஹிம்சையில்லாத முறையை உபயோதித்தல்.

4. வயதான பிராணிகளைப் பராமரிப்பதற்கென்று இந்நாட்டில் ஏற்பட்டுள்ள கால்நடைகொட்டில்களில் எவ்விதத்

திட்டமும் இல்லாமல் அறிவில்லாத முறையில் இந்த வேலை கொஞ்சமும் தெரியாத மக்கள் செய்துவருகிறார்கள். இந்த நிலைமையை நாம் முழுமையும் சீர்திருத்த வேண்டும்.

5. இந்த அடிப்படையான வேலைகள் செய்தால் இந்த நாட்டிலுள்ள முஸ்லீம்கள், தங்கள் சகோதரர்களான ஹிந்துக்களை உத்தேசித்து, இறைச்சிக்காக மாட்டைக் கொல்வது போன்ற செயல்களை விட்டுவிட வேண்டுமென்று தாங்களாகவே உணர்வார்கள்.

இதுவரை கூறியவற்றின் அடிப்படையில் ஒரு கருத்து இருக்கிறது. அதுவே அஹிம்சை, உயிர்களிடத்து அன்பு. முடிவான இந்தத் தத்துவத்தை உணர்ந்தால் மற்றவற்றை உணர்வது எளிது. அஹிம்சை உள்ள இடத்தில் அளவற்ற சகிப்பு, மனவமைதி, விவேகம், தன்னலத் தியாகம் ஆகியவை இருக்கின்றன. பசு பாலனம் எளிதன்று, அன்னிய ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்றுவதைவிட இது கஷ்டமானது.

* * *

கறவைப் பசுக்கள் அல்லது கடாரிகள் போக மற்றவற்றை நிலம் உழுவதற்கு உபயோக்கிலாமா என்று 1915 ஆம் வருஷம் முதலே என்னைக்கேட்டு வருகிறார்கள். இவற்றை நிலம் உழுவதற்கு உபயோகப்படுத்தினால் கெடுதலில்லை என்றுதான் அன்றுமுதல் எண்ணி வருகிறேன். கெடுதலுக்கு மாறாக உழைப்பினால் அவை இன்னும் பலமடைந்து அதிகப் பால் கறக்குமென்று நம்புகிறேன். இந்த நன்மை எப்போது வரக்கூடுமென்றால் மாட்டைத் தனக்குத் தோழனாகப் பாவித்தால்தான். நம் நாட்டில் நடத்துவதுபோலக் கொடுமையாக நடத்துவது கூடாது. எந்த மாடு நமக்குச் சேவைசெய்கிறதோ அந்த மாட்டினிடம் நமக்குச் சினேகபாவமிருக்க வேண்டும். உயிருள்ளது எதுவும் தன் ஜீவனத்துக்கு உழைத்தேயாக வேண்டும். ஜீவன உழைப்பு அபிவிருத்திக்கு இடமானது. மனிதனையோ, பிராணியையோ இது ஒரு போதும் தாழ்த்துவதில்லை.

உபயோகமற்ற மாடுகளைக் கொன்றுவிடலாமா என்பது மற்றொரு கேள்வி. பசுக்கொலையைச் சட்டத்தால் நிறுத்திவிடமுடியாது. நல்ல அறிவு, கல்வி, கருணை இவைகளே இந்த அநீதியை நிறுத்த முடியும். பூமிக்குப்பாரமாய் இருக்கும் பிராணிகளைக் காப்பாற்றுவது கஷ்டம்.மனிதன்பூமிக்குப்

பாரமாகிவிட்டால் அவனைக் காப்பாற்றுவதும் கஷ்டம்தான்.

* * *

காளைகளைக் காயடிப்பது நியாயமா என்று ஒருவர் கேட்கிறார். இது நியாயமில்லை என்றால் காட்டுப்பசுவை நாட்டுப் பசுவாக்கி வைத்திருப்பதும் நியாயமில்லை. அன்றியும், நாகரிகத்தின் போக்கானது பிராணிகளை மனிதன் அடக்கி ஏவல் கொள்ளும்படி செய்து விட்டது. ஏவல்கொள்வதில் கருணை காட்டுவது எப்படி என்பதே கேள்வி. இதுபற்றி மூன்று விதமான அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஒன்று பிராணிகளை உபயோகிக்காமல் அவை செய்யும் வேலைக்கு வேறு சக்தியை உபயோகிக்கலாம் என்பது. இரண்டு, பிராணிகளுடன் தோழமை பூண்டு சகோதரபாவத்துடன் அவைகளை உபயோகித்துக்கொள்வது. மூன்று, மனிதன் சுய நலத்துக்குப் பிராணிகளை உபயோகிக்காமல் அவரவர் தம் சொந்தச் சக்தியையும் மற்றவர்கள் விரும்பி அறிவோடு செய்கிற உதவியையும் உபயோகித்துக்கொள்வது.

இதில், மூன்றாவது கருத்து எனக்கு உடன்பாடு. அறிவும் அன்பும் பொருந்திய மனித சக்தியை உபயோகித்தால் பிராணிகளில்லாமலே பழ உற்பத்தி செய்யலாம். சுமாராகச் சோளச் சாகுபடியும் செய்யலாம். தென்ஆப்பிரிக்கா டிரான்சுவாலில் சட்டமறுப்புக் கைதிகள் என்ற முறையில் நாங்கள் ஒரு நகரசபையின் பூந்தோட்டம் அமைக்க வேண்டியிருந்தபோது கல்தரையானபடியால் கலப்பை அங்குப்பயன்படவில்லை. குந்தாலியால்தான் நாங்கள் கொத்த வேண்டியிருந்தது.

முதல் கருத்து பயனற்றது, மனித குலத்துக்கே கேடானது என்று சொல்லுவேன். மற்ற இரண்டையும் ஏற்ற அளவு நாம் அனுசரிக்கலாம். காயடிப்பதைத் தவிர்க்க முடியாது. ஹிம்சையற்ற முறையில் இதைச் செய்ய வேண்டும்.

ஹிந்து மதம் பசுக்கொலை கூடாதென்று ஹிந்துக்களுக்கே கட்டளையிட்டது, உலகத்துக்கல்ல. பக்தியால் வரும் கட்டுப்பாடு அகத்திலிருந்து உதிக்க வேண்டும். புறத்திலிருந்து வருவது நிர்பந்தம். நிர்பந்தம் என்பது சமயக்கொள்கைக்கு விரோதமானது. இந்தியாவில் இருப்பவர்கள் ஹிந்துக்கள் மாத்திரமல்ல. முஸ்லீம், பார்சி, சீக்கியர், கிறிஸ்தவர், யூதர் அனைவரும் இருக்கிறார்கள். ஹிந்துக்கள் மதத்துக்கு விரோதமானது என்றால், இந்திய நாட்டில் சட்டபூர்வமாக ஏன் பசுவதையைத்தடுக்க வேண்டுமென்பது

எனக்கு விளங்கவில்லை. நான் ஐம்பது வருஷமாக பசு வழிபாடு செய்பவன். பசுவுக்கு இந்திய வாழ்க்கையில் நிரந்தரமான இடமுண்டு. முஸ்லீம் மக்களுடைய மனத்தை ஹிந்து சகோதரர்கள் கவர்ந்தால் இவர்கள் மனம் புண்படாமலிருக்க வேண்டி அவர்கள் பசுவதையைத் தவிர்க்கலாம். கிலாபத் இயக்க காலத்தில் இது நடைபெற்றிருக்கிறது. இப்போது ஏன் அப்படி நடக்கக்கூடாது?

ஹிந்துக்கள் பசுவைக் கொல்லவில்லை என்றால் கொலைக்குச் சமமான காரியம் செய்கிறார்கள். சரியான தீனி போடாமல், பாதுகாக்காமல், கறவை மறத்தவுடனே மாட்டை விற்றுவிடுகிறார்கள். இந்தமாடு கசாப்புக்கடைக்குப் போகிறது என்பதை இவர்கள் அறிய வேண்டாமா? அதிக விலை கொடுப்பவனுக்கு இவர்கள் இதை விற்கிறார்கள். மாடுகள் கப்பலேற்றி அன்னிய நாடுகளுக்குப் போகின்றன. அங்கு மாட்டிறைச்சியின் சாரம் வடித்துக் கண்ணாடியில் அடைத்து மருந்தென்று நமக்குத் திரும்பி வருகிறது. டாக்டர் யோசனையைக் கேட்டு நம் நாட்டில் வைதிகர் தங்கள் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கிறார்கள். இவர்களும் பசுக்கொலை என்ற பாதகத்துக்கு உடைந்தையல்லவா? மேலும், தாறு போட்டு நம்மவர்கள் மாட்டை எவ்வளவோ துன்புறுத்துகிறார்கள். இந்த நிலையில், சட்டம் வந்து தங்கள் பசுவைக் காப்பாற்ற வேண்டுமென்பது பொருந்தாது. மேலும், இந்தியாவில் மாட்டுச் செல்வம் முழுவதும் ஹிந்து மக்கள் வசமே இருக்கிறது. எந்த நாட்டிலும் மாடுகள் இவ்வளவு கீழ்த்தரமான நிலையில் இல்லை. இங்கிலாந்தில் மக்கள் மாட்டிறைச்சியை உண்டபோதிலுங்கூட எவ்வளவோ உயர்தரமாக மாடுகளை வளர்த்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, பெரும் செல்வமாகிய மாட்டுச் செல்வத்தை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டுமே தவிர, சட்டத்தின் உதவியை நாடக்கூடாது.

* * *

பாலிலிருந்து நெய் எடுக்கும் தொழில் முக்கியமான கிராமத்தொழில். தாவர நெய் என்றும், வனஸ்பதி என்றும் இன்று வழங்குகிற கட்டி எண்ணெய் மக்களை ஏமாற்ற உதவுகிறது. கோபூஜை செய்பவர்களுடைய பேராசையால்தான் இந்தக் கேடு விளைகிறது. வனஸ்பதி என்பதற்கு இங்கு இடமில்லை. எண்ணெயிலுள்ள கேடான இயல்பைப் போக்கலாம். ஆனால், அதைக் கட்டியாகவோ நெய் போன்ற தோற்றமுடையதாக்கவோ

அவசியமில்லை. யோக்கியமான உற்பத்தியாளன் போலி வேலையில் இறங்கமாட்டான். கடையெங்கும் இன்று போலிகள் மலிந்து விட்டன. திருட்டு நாணயம் செய்பவனுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும். அப்படியானால் - காசை விட நெய் மிகவும் அதிக மதிப்புடையதாய் இருக்கும்போது, போலி நெய் செய்பவனைத் தண்டிக்க வேண்டாமா?

## 20. இயற்கை வைத்தியம்.

நம் உடம்பு பஞ்ச பூதச் சேர்க்கையாலானது. இவற்றுள் காற்று முதன்மையானது. மனிதன் உணவில்லாமல் பல வாரம் உயிர்வாழலாம். நீரில்லாமல் கொஞ்சநேரம் இருக்கமுடியும். காற்றில்லாமல் சில நிமிஷநேரங்கூட இருக்கமுடியாது. ஆதலால் கடவுள் எங்கும் காற்றுக் கிடைக்கும்படி செய்திருக்கிறார். உணவுப்பஞ்சம், தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றன. காற்றுப்பஞ்சம் ஏற்பட்டதில்லை. இப்படியிருந்தும், நாம் வீட்டினுள் கதவையும், ஜன்னலையும் மூடிக்கொண்டு படுத்துறங்குவதால், கடவுள் கொடுத்த அரிய வரப்பிரசாதமாகிய சுத்தமான நல்லக் காற்றை விலக்கிவிடுகிறோம். திருடர் வரக்கூடுமென்ற பயமிருந்தால் கதவுகளை அடைக்கலாம். ஆனால் ஒருவன் தன்னையே ஏன் உள்ளே வைத்து அடைத்துக்கொள்ள வேண்டும்?

சுத்தமான காற்றைச் சுவாசிப்பதானால், திறந்த இடத்தில் வெளியே படுக்கவேண்டும். ஆனால், வெளியே எங்கும் அழுக்கும் தூசியும் நிரம்பிய காற்றே உலவுமானால், இதிலும் பயனில்லை. நாம் படுத்துறங்கும் இடத்தில் இவ்வழுக்கும் தூசியும் இருத்தலாகாது. தூசியும் குளிரும் முகத்தில் படாதவண்ணம் சிலர் முகத்தை மூடிப்படுத்துறங்குகிறார்கள். இது நோயினும் கேடான பரிகாரமாகும். அன்றியும், வாயால் மூச்சுவிடுகிற தவறான பழக்கம் பலரிடம் இருக்கிறது. உணவை உட்செலுத்துவதே வாயின் வேலை. இது மூச்சுவிடும் கருவியன்று. மூக்கின்வழியே உட்செல்லும் காற்றை மூக்குஅழுக்கின்றி வடிகட்டிச் சுத்தமாக்கி அனுப்புகிறது. இக்காற்று கொஞ்சம் வெப்பமடைந்து உட்செல்லுகிறது.

கண்ட இடமெல்லாம் எச்சில் துப்பியும், குப்பை கூளங்களை எறிந்தும் அசுத்தம் செய்பவர் மனிதனுக்கும் தெய்வத்துக்குமே துரோகம் செய்தவராகிறார். மனித உடம்பு ஈசன் உறையும் ஆலயம். இவ் வாலயத்தினுள் நுழையவிருக்கும் காற்றில் அசுத்தத்தைச்

சேர்ப்பவர் ஆலயத்தையே அனாசாரமாக்குகிறார். அவர் ராமநாமத்தை செபிப்பது வீண்.

✶ ✶ ✶

இயற்கை வைத்தியம் மிக்க எளிமையாயிருப்பதோடு செலவுக்கு இடமில்லாமலும் இருக்கவேண்டும். இவ்வைத்தியம் முழுமையும் கிராமத்திலேயே நடைபெறவேண்டும். கிராமத்தில் கிடைக்காத பொருள்களைத் தருவித்துக் கொள்ளவேண்டும். இவ்வைத்தியத்திற்கான வசதி தளவாடங்களைக் கிராமத்தாரே அமைக்க வேண்டும்.

இயற்கை வைத்தியம் என்பது வாழ்க்கை பற்றிய மனப் போக்கிலேயே ஒவ்வொருவரிடமும் வரவேண்டிய முன்னேற்றமாகும். ஆரோக்கியம் பற்றிய இயற்கை விதிகளை யொட்டி அவர் தம் வாழ்க்கையை நடத்துகிறார் என்பது இதன் பொருள். மருத்துவச் சாலையிலிருந்து செலவில்லாமல் இலவச மருந்துபெறுவது இயற்கை வைத்தியமாகாது. இப்படி இலவச வைத்தியம் பெறுபவன் தருமம் பெறுகிறார். இயற்கை வைத்தியத்தை ஏற்பவன் பிச்சையேற்கமாட்டான். தன் முயற்சியே தன் மரியாதையை வளர்க்கும். இவன் தன் உடம்பில் சேர்கிற நஞ்சையெல்லாம் நீக்க வழி தேடுகிறான். பிற்காலத்திலும் நோய் வராமலிருக்க வழி தேடிக்கொண்டு எச்சரிக்கையாயிருக்கிறான்.

இயற்கை வைத்தியத்தில் நடுநாயகமாயுள்ளது ராம நாம ஜெபம். ஒருவருக்கு வரும் எல்லா நோயையும் இது தீர்ப்பதனால் இந்த ஜெபம் இதயத்திலிருந்து எழ வேண்டும்.

இயற்கை வைத்தியத்தில் பிரதான பாகம் நாரத்தம் பழச் சாறல்ல. சரியான உணவும் சீரான உணவுமே பிரதானம். இன்று நம்மைப்போல நம் கிராமங்கள் முழுமையும் தரித்திர நிலையிலுள்ளன. போதிய காய்கறி, பழம், பால் உண்டாக்குவதே இயற்கை வைத்தியத்தில் முக்கிய வேலை. இதற்குச் செலவிடுகிற நேரம் வீணல்ல. இதனால் கிராமங்களுக்கும் இந்தியா முழுமைக்குமே நன்மை.

✶ ✶ ✶

இயற்கை வைத்தியத்துக்கே நடுநாயகம் என்று நான் கூறுகிற ராமநாம ஜெபம், மூடநம்பிக்கைக்கு விரோதமானது. நாவினால் மட்டும் நாமபாராயணம் செய்வது வைத்தியமாகாது.

ராமநாமம் இதயத்திலிருந்து வரவேண்டும். கடவுளிடம் மனப்பூர்வமான பக்தியும் அவர் வகுத்த நெறிபற்றிய அறிவும் இருந்தால், வேறு உதவி இல்லாமலே நோய் நீங்கும். அந்த நெறியாவது, உடம்பின் பூரண ஆரோக்கியத்திற்கு உள்ளத்தின் பூரண ஆரோக்கியம் அவசியம் என்பதுதான். ஆரோக்கியமான மனம் ஆரோக்கியமான இதயத்திலிருந்து உண்டாகிறது. இது டாக்டர் வந்து ஸ்டெதாஸ்கோப் என்ற கருவி வைத்துப் பரிசோதிக்கிற இதயமல்ல. இது ஈசன் கோயிலாகக் கொண்ட இடமாகிய நினைப்பவர் இதயம். ஈசன்வீற்றிருக்கிற நெஞ்சத்தில் தீயகருத்துச்சிறிதும் புக இடமிராது என்பார்கள். தூய சிந்தையுள்ள இடத்தில் நோய் புகாது. இந்த நிலை வருவது ஒரு வேளை அருமையாகலாம். ஆனால் இதை உணர்வதுதான் இந்த நிலை அடைவதற்கு முதல்படி. இதற்கான முயற்சி செய்வது அடுத்தபடியாகும். இதுவரையில் மனிதன் கண்டறிந்த எல்லா இயற்கை நியதிகளையும் அனுசரித்து நடப்பது அவசியமான மாறுதலைத் தோற்றுவிக்கும். இந்தவிதிகளைக் கவனிக்காமல் விளையாடிவிட்டுத் தூய நெஞ்சம் படைக்கமுடியாது. தூய நெஞ்சமிருக்குமானால், ராமநாமம் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. இதுவே உலகத்துக்குப் பெரியோர் அனைவரும் சென்ற நெறி.

நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது மலச்சிக்கல், தலைவலி முதலிய தொந்தரவுகள் எனக்கு இருந்துவந்தன. அவற்றுக்குப் பரிகாரமாக உணவை ஒழுங்கு படுத்திக்கொண்டு பேதி மருந்துமட்டும் உண்டுவந்தேன். உடம்பு சுமாராய் இருந்தபோதிலும், பூரண ஆரோக்கியம் இருந்ததென்று சொல்ல முடியாது. எப்போது பேதி மருந்திலிருந்து விடுதலை கிடைக்குமென்று நான் ஏங்கியது உண்டு.

கூனி என்பவருடைய இடுப்புஸ்நானம் முதலியவைகளைச் செய்துபார்த்தேன். சொற்ப பலன் இருந்தாலும் மலச்சிக்கல் பூரணமாக நீங்கவில்லை. அந்தச் சமயம் ஜஸ்ட் என்பவர் எழுதிய 'மீண்டும் இயற்கை வாழ்வு' என்ற புத்தகத்தைப் பார்த்தேன். அதில் அவர் களிமண் வைத்தியத்தைக் குறிப்பிட்டிருந்தார். இதை நான் செய்து பார்த்தபோது ஆச்சரியகரமான பலன் ஏற்பட்டது: களிமண் சிகிச்சைமுறை என்றால் வயிற்றின்மேல் ஒரு மெல்லிய துணியைப்போட்டு அதன்மேல், பற்று போடுவது போல, சுத்தமான

ஈரக்களிமண்ணைப் போடுவதாகும். இதை நான் படுக்கும்போது வயிற்றில் போட்டுக்கொண்டு விழித்த உடனே இரவிலேனும் காலையிலேனும் நீக்கிவிடுவது வழக்கம். பல நண்பர்களுக்கும் இச் சிகிச்சையைச் செய்திருக்கிறேன். நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் கூட நான் இதைச் செய்துகொள்வதோடு, என் தோழர்களுக்கும் செய்வதுண்டு.

மருந்து சாப்பிடுவது அவசியமில்லை என்றே நான் கருதுகிறேன். ஆயிரம்பேர் வியாதியுள்ளவர்களில் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேருக்கு நேரப்படிக்கான உணவு, நீர், களிமண் சிகிச்சை, மற்ற வீட்டு வைத்திய முறைகளால் பூரணசுகம் வரும்படி செய்யலாம். எடுத்தவுடனே எந்தச் சிறு நோய்க்கும் வைத்தியரிடம் ஓடி மூலிகை மருந்தையும், ரசாயன மருந்தையும் விழுங்குகிறவன், தன் ஆயுளைக் குறைத்துக் கொள்வதோடு, தன் உடம்பைத் தான் ஆட்கொள்ள முடியாமல் தன் உடம்புக்கு அடிமையாகி, தன் மனிதத்தன்மையையும் இழந்து விடுகிறான்.

* * *

நான் கூறுகிற இயற்கை வைத்தியம் கிராமத்தாருக்கு என்றே கூறுகிற திட்டமாகும். ஆதலால், இதில் எக்ஸ்ரே கருவி முதலியவற்றுக்கு இடமில்லை. இந்தத் திட்டத்தில், அதாவது இயற்கை வைத்தியத்தில், கொயினா, பென்சிலின் போன்ற மருந்துகளுக்கும் இடமில்லை. உடலின் சுகாதாரமும் ஆரோக்கிய வாழ்க்கையுமே முக்கியமானவை. இவைகளே போதும். இவற்றில் எல்லோரும் திறமை பெற்று விட்டால் பிறகு நோய்க்கு இடமில்லை. இயற்கையின் விதிகளை எல்லாம் அனுசரித்து நோய் நீக்குவதில், மேலான மருந்தாகிய ராமநாமம் கூடவே இருக்கிறது. ஆனால், ஒருகண நேரத்தில் இந்த மருந்து பிரபஞ்சமெங்கும் பரவ முடியாது. இதனால் சிகிச்சை வரவேண்டுமென்றால் வைத்தியரே ராமநாம சக்தியின் உருவமாயிருக்கவேண்டும். அதுவரையில் பஞ்ச பூதங்களே போதுமானவை. அவையாவன, மண், நீர், தீ, காற்று, ஆகாசம். இயற்கை வைத்தியம் இவற்றோடு நின்றால் போதும். அவசியமானால் ஆங்காங்கு பயிராகிற மூலிகைகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

## சமக்ர கிராம சேவை

இன்றுள்ள நிர்மாணத் திட்டத்தில் 18 அங்கங்களிருக்கின்றன. அகிம்சையின் சின்னமான ராட்டை இவற்றில் நடுநாயகமாக இருக்கிறது. ஆகவே ஊழியர் அனைவரும் நூற்கவேண்டும். நூற்றலைப்பற்றி எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். ஊழியர் ஒருவர் காகிதம் செய்யும் தொழிலைத் தம் பிரதானத் தொழிலாகக் கொள்கிறார் என்று வைத்துக்கொள்வோம். தம் ஜீவனத்தை அத்தொழிலைக் கொண்டே அவர் நடத்த வேண்டியவர். வேறுவேலை செய்வதற்கு அவருக்குக் கொஞ்சமும் நேரம் இராது. எனினும் அவர் ராட்டைமூலமாகவும் காகிதத்தொழில் மூலமாகவும் கிராமத்துக்கு என்ன செய்யமுடியுமோ அதைவிட அதிகமான சேவையைச் செய்வது சாத்தியந்தான். உதாரணமாக அவர் அந்த கிராமத்துக்கு வேண்டிய துப்புரவு , சுகாதார வேலை செய்யலாம். நோயுற்றவர்களுக்கு பணிவிடை செய்யலாம். இதற்கு முழுப்பொறுப்பு அவர் ஏற்கமுடியாதபோது கிராமத்தாருக்கு நோயுற்றோர் பணிவிடை பற்றிய அறிவு புகட்டலாம்.

மற்றோர் ஊழியர் ராட்டை வேலை மாத்திரம் தீவிரமாக மேற்கொண்டு அதன்மூலம் தம் ஜீவனத்தை நடத்த முடிவு செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் அப்படிச்செய்வது பொருத்தம்தான். ராட்டை சுற்றுவதனால் ஒருவர் தம் ஜீவனத்தை நடத்திக் கொள்வதோடு கூட அயலில் வாழ்பவர்களுக்கு பயனுள்ள ஊழியம் செய்யவும் முடியும் என்று நான் உறுதியாக எண்ணுகிறேன். இதில் முக்கியமானது என்ன என்றால், ராட்டை சுற்றியபோதிலுங்கூட அதற்கும் அதிகப்படியாகத் தமக்கு இருக்கவேண்டிய முக்கியமான வேலைகள் எது, துணை வேலைகள் எவை என்பதை ஒவ்வொரு ஊழியரும் தாமே முடிவு செய்து கொள்ளவேண்டும். அவர் என்ன வேலை செய்வதாயிருந்த போதிலும், அதை அறிவுத் திறனோடு புத்திபூர்வமாகவும் அவர் செய்யவேண்டும். இவ்விதமாக அறிவுத்திறனோடு அவர் நூல் நூற்பதானால், நூற்பதற்கு முந்திய வேலை முறைகளையும் பிந்திய வேலை முறைகளையும் அவர் பூர்த்தியாய் அறியவேண்டும். எந்த வேலைகளில் அவர் தீவிரமாய் ஈடுபடவிரும்புகிறாரோ அதைப்பற்றிய முழு அறிவும் அவருக்கு வேண்டும். கூட, நிர்மாணத்திட்டத்தின் மற்ற அங்கங்கள் பற்றிய சுமாரான பொது அறிவும் அவருக்கு இருக்கவேண்டும். வான சாஸ்திரம் கற்பவர் மற்றச்சாஸ்திரங்களைப்பற்றிய பொதுவான

அறிவு கொஞ்சமேனும் இல்லாமல் வான சாஸ்திர நிபுணராக முடியாது. அதேபோல, தொண்டர் ஒருவர் நிர்மாண வேலையின் மற்ற அங்கங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் இருக்கமுடியாது.

## சமக்ர கிராம சேவை என்பது யாது?

பதினெட்டு அம்சங்கொண்ட நிர்மாணத் திட்டத்தில் சமக்ர கிராம சேவையும் அடங்குகிறது. சமக்ர கிராம சேவகர் ஒருவர் கிராமத்தில் வாழ்பவர் ஒவ்வொருவரையும் தெரிந்துகொண்டு, அவரவருக்குத் தம்மாலான சேவையைச் செய்யவேண்டும். எல்லா வேலையையும் அவர் தாம் ஒருவராகவே செய்யமுடியும் என்பது இதன் பொருளல்ல. மக்கள் தங்களுக்கு வேண்டியவற்றைத் தாங்களே எப்படி செய்துகொள்வது என்பதைக் காட்டி அவர்களுக்குத் தேவையான பொருள்களையும் தேடிக் கொடுப்பார். தமக்குவேண்டிய உதவியாளரையும் அவரே பழக்கிக்கொள்வார். கிராமத்தாரை அவர் தம் அன்பினால் வசப்படுத்தி தம் துணையை அவர்கள் தேடும்படியும், தம் யோசனையைக் கேட்டு நடக்கும்படியும் செய்வார்.

நான் ஒருகிராமத்தில் போய்த் தங்குகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கிராமத்தில் ஒரு செக்கு இருக்கிறது. அங்கு நான் மாதம் பதினைந்து அல்லது இருபது ரூபாய் சம்பாதிக்கிற சாமானிய வாணியனாக இருக்கமாட்டேன். இருந்தால், நான் வாணிய மகாத்மாவாக இருப்பேன். மகாத்மா என்ற வார்த்தையை நான் இப்போது வேடிக்கையாக உபயோகிக்கிறேன். என் கருத்து என்னவென்றால், நான் வாணிப வேலை செய்தாலும் மற்றவர்கள் என்னைப் பின்பற்றத்தக்க முன்மாதிரியாக இருப்பேன். கீதையும் கொரானும் தெரிந்த வாணிபனாக இருப்பேன். ஊர் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றத்தக்க அறிவு எனக்கு இருக்கும். ஒரு வேளை நேரம் இல்லாத காரணத்தால் நான் கல்வி போதிக்க முடியாமற் போகலாம். அப்போது கிராமத்தார் என்னிடம் வந்து தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்க ஏற்பாடு செய்யும்படிக் கேட்பார்கள். 'நான் ஒரு உபாத்தியாயரை வருவிக்கிறேன்'. அவர் செலவிற்கு நீங்கள் பணம் தர வேண்டும்' என்று நான் சொல்வேன். அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வார்கள். அவர்களுக்கு நான் நூல் நூற்கக்கற்பிப்பேன். தறிகாரர் ஒருவர் வேண்டும் என்று

அவர்கள் என்னை வந்து கேட்கும்போது, உபத்தியாயரை நியமித்த மாதிரியே அதே நிபந்தனையின் மேல் அவர்களுக்கு ஒரு தறிகாரரைத் தருவிப்பேன். தங்கள் நூலை அவர்கள் துணியாக நெய்துகொள்ள இவர் கற்பிப்பார்.

கிராம மக்கள் வாழ்க்கையில் துப்புரவும் சுகாதாரமும் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்துவேன். மக்கள் என்னிடம் வந்து தோட்டி ஒருவன் வேண்டும் என்று கேட்கும்போது, நானே உங்களுக்குத் தோட்டியாக இருக்கிறேன், தோட்டிவேலையில் உங்கள் எல்லோரையும் பழக்குகிறேன், என்று சொல்லுவேன்.

சமக்ர கிராமசேவை என்று நான் நினைப்பது இதுவே. இந்த, நாகரிக யுகத்தில் நான் குறிப்பிட்ட லட்சணமுடைய வாணியன் அகப்படமாட்டான் என்று நீங்கள் சொல்லலாம். அது உண்மையானால் இந்த யுகத்தில் கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியாது என்றே சொல்லுவேன். ருஷ்யாவிலுள்ள வாணியன் நிலையைப் பாருங்கள். எண்ணெய் ஆலைவைத்து ஆட்டுபவனும் வாணியன்தான். அவனிடம் பணமிருக்கிறது. ஆனால், அவனுடைய பணம் எல்லாம் பலத்தால் வந்ததல்ல. அவனுடைய அறிவில்தான் உண்மையான பலமிருக்கிறது. உண்மையான அறிவுதான் உயர்ந்த மனோபலந்தருகிறது. அப்படிப்பட்ட அறிவுடையவன் யோசனையையே எல்லோரும் நாடுகிறார்கள். வினோபாவைப் பாருங்கள். அவரே சிறந்த வாணியர். உங்கள் சக்திக்கு இயன்றமட்டும் நீங்கள் எல்லோரும் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றமுடியும்.

## மரங்கள் பயிரிடுங்கள்

நம் நாட்டில் மரங்களை அழித்த காரணத்தால் மழை குறைந்து போயிற்று. பயிரிட்டவுடன் கொஞ்சநாள் நீர்விட்டுக் கவனித்தால் மரங்கள் பிறகு தாமே வளர்ந்துவிடும். மேலும், ஓர் ஏக்ரா நிலத்தில் உணவுத் தானியங்கள் பயிரிட்டுவரும் வருமானத்தைவிட மற்றோர் உணவுப் பொருளான பழந்தரும் மரங்கள் அதிக லாபம் கொடுக்கும். திறந்த இடங்களிலெல்லாம் காய்கறி பயிரிடுவது அவசியம். இப்படித் தோட்டத்திலும் தொட்டியிலும் காய்கறி பயிரிடுவது நல்ல பொழுது போக்கு என்பதன்றி இது ஆரோக்கியகரமான வேலையும் ஆகும்.

## நிர்மாணத் திட்டம்

கதரபி விருத்தியும் கைத்தொழில் வளர்ச்சியும்,
மதவொற் றுமையும், மாதர் முன் னேற்றமும்,
மதியினை மயக்கும் மதுவினை விலக்கலும்,
புதுமுறைக் கல்வியும், பொதுஜனக் கல்வியும்,
நம்தாய் மொழியும், இந்திய மொழியும்,
ஊர்ச் சுகா தாரமும், சரிசம உடையும்,
வையம் வாழும் வகைசெயும் உழவர்,
குஷ்டம் என்னும் கொடுநொய் கொண்டோர்,
மலைவாழ் குடிகள், மாணவர் தம்மொடு,
தொழில்செய் மக்கள் துயரம் தீர்த்தலும்,
ஆய இப் பதினெண் அரும்பணி வாயிலாய்ச்
சர்வோ தய நற் சமுதா யத்தினை,
நிர்மாணம் செய்ய நித்தமும் உழைப்போம்.

– கோ. வேங்கடாஜலபதி

அருள் ஜோதியே! வழி காட்டிடு என்னை
அழைத்துமே ஐய சென்றிடு

இருள் சூழுதே அப்பா எங்கு நான் செல்வேன்
இல்லம் தூரத்தில் ஆச்சுதே

மருளு முற்றன என்றன் பாதங்கள்
மன்னவா அருள் செய்குவாய்

பொருள் பல இனி பார்க்க வேண்டிலேன்
போதும் இந்த அனுபவம்

வழி யெனக்குநீ காட்டுக என
வந்தனை செய்தறிகிலேன்

விழி குறித்திட்டபடி யிது வரை
வேகமாய் சென்ற பாவியேன்

வழிபய முண்டு ஆயினும் டம்பம்
வளர்திமிர் கொண்டு சென்றனன்

பழி மிகுந்த என் பழைய நாட்களை
பரமனே நீயும் மறப்பையோ?

அகதி யென்மீது ஆசி தந்திடு
அது இங்கு வழி காட்டிடும்

சகதி தன்னையும் சரளைக் கல்லையும்
சரமழையையும் தாண்டுவேன்

அகன்றிடும் இருள் அருணகாலத்தில்
அமரர் புன்னகை காணுவேன்

பகலைப் பார்த்திட ஆர்வமுற்றனன்
பரமனே வழி காட்டுவாய்.

# காந்திய சிந்தனைத் தேர்வுக்குரிய நூல்கள்

## சான்றிதழ் தேர்வு

| | |
|---|---|
| சத்திய சோதனை | - மகாத்மா காந்தி |
| காந்திஜி | - டாக்டர். மா.பாதமுத்து |
| காந்தி யுகம் | - டாக்டர். மா.பா.குருசாமி |
| சர்வோதயம் | - " " |
| அஹிம்சை | - டாக்டர். அப்துல் ரஸாக் |
| காந்திக்கு முந்திய புரட்சிகள் | - மகரிஷி.க.அருணாசலம் |

## டிப்ளமோ தேர்வு

| | |
|---|---|
| காந்தி வழிச் சமயம் | - தி.சேஷாத்திரி |
| பதினொரு மகாவிரதங்கள் | - மகாத்மா காந்தி |
| சத்தியமே கடவுள் (ரகுபதி ராகவ) | - மகாத்மா காந்தி |
| பெண்களுக்கு | - மகாத்மா காந்தி |
| உலக அமைதிக்கு அகிம்சை வழி | - மகாத்மா காந்தி |
| வகுப்பு ஒற்றுமை | - மகாத்மா காந்தி |
| சமூகத்தில் பெண்கள் | - மகாத்மா காந்தி |
| நிர்மாண திட்டம் | - மகாத்மா காந்தி |
| சர்வோதயம் | - மகாத்மா காந்தி |
| ஜனநாயகம் உண்மையும் போலியும் | - மகாத்மா காந்தி |
| இந்திய சுயராஜ்யம் | - மகாத்மா காந்தி |
| காந்தி வழி வாழ்க்கை | - டாக்டர்.ஜே.ஸி.குமரப்பா |
| உழைப்பு | - " " |
| காந்தி வழி ஓர் அறிமுகம் | - க.ரா.கந்தசாமி |
| கோட்பாடுகளில் காந்தியம் | - டாக்டர்.முத்துலட்சுமி டாக்டர்.ஆண்டியப்பன் |
| காந்திய சிந்தனைகள் | - டாக்டர்.மா.பா.குருசாமி |
| காந்தி வழி கல்வியும் சமூகமும் | - டாக்டர்.மா.பாதமுத்து |

*கிடைக்குமிடம் :-*

**காந்திய இலக்கிய சங்கம்**

காந்தி மியூஸியம், மதுரை - 625 020.